# இளங்கதிர்

## 02

## 2020

KN/GA/DPS/2020/01

## பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

## கிளிநொச்சி

# நூல் விபரம்

**நூலின் பெயர்**

இளங்கதிர் - 02

**நூல் வகை**

ஆண்டிதழ்

**முதற் பதிப்பு**

மார்கழி – 2020

**தொகுப்பு**

இதழ்க் குழு
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு
கிளிநொச்சி

**வெளியீட்டு எண்**

02

**தாள் வகை**

B5 80 gsm Bank Paper

**பிரதிகள்**

50

**அட்டை வடிவமைப்பு**

செல்வன். சிவகுமார் திருமாறன்
உப செயலாளர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

**வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும்**

சூரியன் பதிப்பகம்
திருநகர் வடக்கு, திருநகர்
கிளிநொச்சி

**பக்கங்கள்**

63

# பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# BIRDS OF AFFECTION YOUTH ORGANIZATION

இல:-19,
முதலாம் ஒழுங்கை,
திருநகர் வடக்கு,
திருநகர்,
கிளிநொச்சி.

No:-19,
1st lane
Thirunagar north,
Thirunagar,
Kilinochchi.


# இதழின் உள்ளே…


- தமிழ்த் தாய் வாழ்த்து
- இதழ்க் குழு
- ஆசிச் செய்திகள்
- வாழ்த்துச் செய்திகள்
- வெளியீட்டுரை
- அமைப்பின் அறிமுகம்
- தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று
- உறுதியுரை
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் நிர்வாக அங்கத்தவர்கள்
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் கட்டமைப்பு
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் 2020 ஆம் ஆண்டு செயற்றிட்டங்கள்
- அமைப்பின் பதிவு நடவடிக்கைகள்
- கணக்கறிக்கை (2018.12 – 2019.03)
- தீராத பட்டினி
- அமைப்பின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கல்
- தற்கொலைக்கு தீ வைப்போம்.
- மாதாந்தக் கலந்துரையாடல்கள்
- வெற்றியைத்தேடி
- கட்டமைப்புக்களை வலுப்படுத்தல்
    - ✓ கல்வித்துறை
    - ✓ கலை, பண்பாட்டுத்துறை
- சேகுவேரா
- இளைஞர்களூடாக சமாதான செயற்றிட்டத்தை முன்னெடுத்தல்.
- வலிகளின் வரிகள்
- போசாக்கு உணவுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள்
- சமூகப் பணிகளில் இளைஞர்களின் பங்களிப்புக்கள்
- சமூக மட்ட அமைப்புக்களுடனான ஒருங்கிணைந்த செயற்றிட்டங்கள்
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பும், ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனமும்
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் 02 ஆவது அகவை நாள் நிகழ்வு
- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் அலுவலக புகைப்படங்கள்
- நன்றி நவில்தல்

# தமிழ்த்தாய் வாழ்த்து

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழத்துதுமே!"



# இதழ்க் குழு

1. திருமதி.செல்வகுமாரி கணேசமூர்த்தி
   ஆலோசகர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

2. திரு.செல்வராசா கமலதாஸ்
   ஆலோசகர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

3. செல்வி.கேஜிதா பாலச்சந்திரன்
   தலைவர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

4. செல்வி.தமிழினி மகேந்திரன்.
   செயலாளர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

5. செல்வன்.தர்மதேவன் வினோஜன்
   பொருளாளர்.
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

6. செல்வன். சர்வேஸ்வரன் வில்வரசன்
   உறுப்பினர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

7. செல்வி. டிசாந்தினி சண்முகராசா
   உறுப்பினர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

8. செல்வி. தர்மிதா இராசேந்திரம்
   உறுப்பினர்
   பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# ஆசிச் செய்தி




பாசப்பறவைகள் என்னும் பெயரை நாம் உச்சரிக்கும் போது எமது உள்ளத்தில் பாசப் பிணைப்புகள் ஏற்படுவதை நாம் நன்றாக உணர்கிறோம். இளைஞர்கள் ஒன்று சேர்வது என்பது இக் காலத்தில் பெரும் கைங்காரியமானது எனலாம். அப்படி கூடினாலும் நல்ல பல செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து வருகிறது. இக்கால கட்டத்தில் கல்வி, கலை, பொருளாதார முன்னேற்றம் மற்றும் இளைஞர்கள் ஊக்குவிப்பு இப்படியான பல துறைகளை முன்னேற்றுவதில் ஆர்வம் கொண்டு செயல்படுவது போற்றுதற்குரியது. மதம் சார்ந்த பிரச்சினைகள் பெருகி வரும் இக் காலத்தில் சர்வமதமும் சம்மதமே எனும் நோக்குடன் எல்லா மதத்தவர்களையும் இணைத்து ஒரு வழி நடத்தலில் கொடுக்கும் மதிப்பை பார்க்கும் போது இளம் சமுதாயத்தினரின் துடிப்பை நினைத்து வியக்கத் தோன்றுகின்றது

எனவே இத்தனை அறிவு, ஆற்றல் ,அமைதி, அடக்கம் என்னும் ஐந்து தன்மைகளினையும் உள்ளடக்கி பொறுமை என்னும் பொக்கிசத்தை கையாண்டு எம்மால் முடியும் என்னும் கூற்றுக்கு அமைவாக, நேராக, சிறப்பாக இற்றைக்கு 3 ஆண்டு காலமாக இயங்கி வரும் பாசப்பறவைகள் என்னும் இளைஞர் அமைப்பினரால் வெளியிடப்படும் இளங்கதிர் எனும் நூல் எதிர் காலத்தில் சிறந்த ஒரு அறிவூட்டும் நூலாக அமையும் என்று நம்பிக்கையுடன் கூறுவதில் நான் பொரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தங்கள் சேவைகளின் தன்மைகளை விழிப்புணர்வு ஏற்படும் வகையில் வெளியிடப்படும் இளங்கதிர் எனும் நூல் சிறப்பாக பல அம்சங்களை உள்ளடக்கி மக்களுக்கு உணர்த்துவதுடன் நாமும் முன்னேற்ற பாதையில் செல்ல வேண்டும் என்ற நிலை உணர்த்துவதாக இருக்கின்றது. இந் நூல் என்றும் சிறப்பாகவும் சிறந்ததாகவும் அமைய அனைத்து இளைஞர்களும் ஒன்று சேர்ந்து முயற்சிப்பதற்கு பாராட்டு தெரிவிப்பதுடன் என்றும் இப் பாசப்பறவைகள் அமைப்பும் இந்நூலும் சிறந்து விளங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிராத்திப்பதுடன் என்றும் நலமுடனும் வளமுடனும் வாழ எனது நல்லாசிகளையும். எனது ஆசிர்வாதங்களையும் தெரிவத்துக்கொள்கிறேன்.

சுபமஸ்து

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆகமப் பிரவீணா
சிவஸ்ரீ.ஜெக.ஜெகதீஸ்வரக் குருக்கள்
(சமாதான நீதவான்)
குமரபுரம் ஸ்ரீ முருகன் தேவஸ்தான பிரதம குரு.
கிளிநொச்சி.

# ஆசிச் செய்தி



ST. THERESA'S CHURCH

A9 Road,
Kilinochchi,
Sri Lanka.
T.P. No. 021 228 5755
Reg. No. CA/Jaffna/14/19/C1

"பாசப்பறவைகள்" இது கிளிநொச்சி மாவட்டத்தின் அழிக்க முடியாத அன்பின் பெயர். எங்கேயோ சென்று கொண்டிருக்கும் உலகத்தின் இருளுக்குள்ளே யதார்த்தத்தை தேடும் ஒரு குழுமம் தான் பாசப்பறவைகள். இளமைப் பருவம் வெறும் பொழுது போக்கிற்கே என்கின்ற எண்ணத்திற்கு நிதர்சனம் போதித்து இளமையின் இயலுமானவைகளை இவ்வுலகிற்கு காட்டி நிற்கும் உன்னதமான பணியின் வாழ்வு நிலை தான் பாசப்பறவைகள். வீணே பொழுதைப் போக்கும் இளைஞர்களுக்கு உண்மைகளை உணர்வோடு வாழச் செய்யும் ஒரு அழகான அமைப்பு பாசப்பறவைகள்.

காலம் இப்போது மாறிக் கொண்டிருக்கின்றது.
உண்மைகள் உறங்கிக் கொண்டிருக்கின்றது.
யதார்த்தம் புதைந்த கொண்டிருக்கின்றது.

எழுந்து நிற்பதற்கு, விழித்து எழுவதற்கு எமக்கு இருக்கும் ஆத்மீக சக்தி தான் பாசப்பறவைகள். காலமும், நேரமும் மீண்டும் கிடைப்பதில்லை என்கின்ற உண்மைகளை நன்கு உணர்ந்து இளமைப்பருவம் சாதிப்பதற்கானது என்பதை நிதர்சனமாக்கி, இளமைக் காலத்தை பயனுள்ள விதமாக செலவழிக்க ஊன்று கோலாய் அமைவது பாசப்பறவைகள்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா பயங்கரம் வாழ்வின் இருப்புக்களைச் சிதைக்கும் இன்றைய நாட்களிலும் தேவையில் உழல்வோர் ஏராளமானவர்கள். ஏங்கும் நிலையிலேயே நின்று, நிதானித்து, சென்று, பணி செய் என்று ஒரு உத்வேகத்தை, இளைஞர் மத்தியில் பரப்புவது தான் பாசப்பறவைகள்.

நடக்கின்ற பாதையில் முட்கள் நிறைந்தாலும், முன்னோக்கிச் செல்வதற்கு அஞ்சாத ஒரு பருவம் இளம் பருவம். நான் முட்களில் நடந்து பாதையை செம்மைப்படுத்தினால் எனக்குப் பின் வரும் சந்ததி என் தியாகத்தின் பாதையிலே சுதந்திரமாக நடக்க முடியுமல்லவா? இது இன்றைய தேடலாக அமையட்டும். வுழ்த்துகிறேன். ஊங்கள் பணியைப் பாரத்து தலை சாய்கிறேன். வெற்றி பெற ஆசிக்கிறேன். இளைஞர்கள் இமையம் தொட ஒரு புதுயுகம் செய்து புனிதமான மனிதர்களை எம் தேசம் காண வேண்டுமென வாழத்தி ஆசிப்பதுடன், தங்கள் இரண்டாவது இளங்கதிர் இதழ் சிற்பாக வெளிவரவும் வாழத்துகின்றேன்.

நன்றி

அருட்பணியாளர் ஜோ.அ.ஜேசுதாஸ்
மறைக் கோட்ட முதல்வர்
புனித திரேசாள் ஆலயம்
கிளிநொச்சி



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பிரதேசங்களில் இளைஞர் நலச் செயற்றிட்டங்களினை செய்து வரும் ''பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது'' 2020.07.22 ஆம் ஆண்டு எமது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு கடந்த சில காலங்களாக வினைத் திறனுடன் இவ் அமைப்பானது இயங்கி வருவதுடன், அமைப்பு தொடர்பாக வெளி வரவுள்ள இளங்கதிர்:-02 மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டு அக மகிழ்வடைகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள துடிப்புமிக்க இளைஞர்களின் உணர்வினை கருத்திற் கொண்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் நற்பண்புகளுடன் கூடிய ஆளுமைமிக்க இளைஞர் சமூகத்தினை உருவாக்குவதே இப் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் இதன் நோக்கமாகும்.

இவ் அமைப்பானது எமது கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற இளைஞர் அமைப்பாக காணப்படுவதுடன், இளைஞர்களூடாக ''சமாதானத்திற்கான எதிர்காலம்'' எனும் தலைப்பில் சமாதான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் கலைகளினூடாக சமாதானத்தினை கட்டியெழுப்புதல் தொடர்பான பயிற்சிகளை வழங்கியமை மற்றும் போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றமை முக்கியமான விடயங்களாகும். குறிப்பாக covid-19 காலத்தில் SLCDF மற்றும் OISD நிறுவனத்துடன் இணைந்து 100 வறிய குடும்பங்களிற்கு 1000 ரூபாய் பெறுமதியான நிவாரண உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும்.

இச்சிறப்பான செயற்பாட்டினை செய்து வரும் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், இவ் அமைப்பின் கடந்தகால செயற்றிட்டங்களை தாங்கி வெளியாகும் இளங்கதிர்:-02 எனும் இதழுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதனையிட்டும் பெரும் மகிழ்வடைகின்றேன்.

நன்றி.



S.Sathiyaseelan
Developmant Officer (NGO Coordinator)
National Secretariat for NGO's
District Secretariat
Kilinochchi

திரு.சி.சத்தியசீலன்.
மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2018ம் ஆண்டு தொடக்கம் இளைஞர், யுவதிகளின் நலனில் அக்கறை கொள்ளும் நோக்கோடு செயற்படுகின்ற பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பினால் வெளியிடப்படும் **''இளங்கதிர் - 02''** இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை முன்னிட்டு பெரு மகிழ்வடைவதுடன் உங்கள் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு தங்களுடைய அமைப்பானது இனம், மதம், மொழி கடந்து அனைத்து இனத்தவர்களையும் ஒன்றிணைத்து சமாதானத்திற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை காணக் கூடியதாக உள்ளதுடன் மேலும் இது போன்ற செயற்பாடுகள் மூலம் நிலையான ஓர் இலக்கை அடைய வேண்டும் என்பது எமது இணையம் சார்ந்த எதிர்பார்ப்பாகும்.

மேலும் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது ஆரம்பித்த குறுகிய காலத்தில் மிகவும் நேர்த்தியாகவும், வினைத்திறனுடனும் பல்வேறு இளைஞர்கள் சார் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது பாராட்டுதலுக்குரியது. அத்துடன் எமது இணையம் சார்ந்த செயற்பாடுகளில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுவதையும், எம்மால் பார்க்க கூடியதாக உள்ளது. மேலும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து தங்களுடைய இலக்கு மற்றும் தூரநோக்கு இரண்டும் ஒன்றிணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களை வலுப்படுத்த வேண்டும் என்பது எமது அவா.

இவ் இளைஞர் அமைப்பினால் தமது கடந்த கால செயற்றிட்டங்களை இதழ் வடிவமாக்கி **''இளங்கதிர் - 02''** எனும் பெயர் சூட்டி வெளியீடு செய்வது அவர்களது வரலாற்றை உறுதிப்படுத்தும் ஒரு நிலையான தன்மையாகும். இவ் இதழானது ஆண்டு தோறும் இளைஞர்களது செயற்பாடுகளை தாங்கி வெளிவர எமது அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி.

President
Ngo's Consortium
Kilinochchi District.

திரு.சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்
தலைவர்
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
கிளிநொச்சி.



# வாழ்த்துச் செய்தி

## வானம் தொடும் பாசப்பறவைகள்

பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது 2018 ஆம் ஆண்டு உருவாகி இரண்டு ஆண்டுகள் கிளிநொச்சி மண்ணில் வீறு நடை போட்டு, பரிணாம வளரச்சியடைந்து, மூன்றாம் ஆண்டில் கால் தடம் பதிக்கும் அழகிய தருணத்தில் வெளி வரும் இவ் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இளைஞர்களின் சமூக, பொருளாதார, அபிவிருத்தி மற்றும் சமாதானம் நல்லிணக்கத்திற்காக இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து செயற்படும் செயற்பாடுகள் அனைத்தும் காத்திரமானது.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்காக பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட "எல்லைகளைக் கடந்து செல்லும் இளைஞர் சமூகம்" எனும் செயற்றிட்டம் போற்றுதலுக்குரியதாகும். இளைஞர் யுவதிகளின் திறன் அபிவிருத்திக்காக முன்னெடுத்து செயற்படுத்திய திட்டங்களில் மொழித் திறனை மேம்படுத்துவதற்கான ஆங்கில மொழி பயிற்சி வகுப்புக்கள், நாடு கடந்த சுற்றுலாப் பயணங்கள், தலைமைத்துவப் பயிற்சிகள் என்பனவும் நடாத்தப்பட்டமை பாராட்டத்தக்கது.

மேலும் சமாதானத்துடன் கூடிய நற்பண்பு மற்றும் நல்லொழுக்கமுடைய இளைஞர் அணிகளை உருவாக்குவதன் மூலம் எமது சமூகத்தினதும், எமது தேசத்தினதும் வளர்ச்சியை நோக்கிய பணிகளில் வானம் தொடும் தூரம் வளர்ச்சி காண பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பிற்கு எனது வளமான வாழ்த்துக்கள்!

எங்கள் மண்ணில் மாற்றம் வேண்டும்
மங்காப் புகழொடு தமிழும் வேண்டும்
பண்பு மிக்க இளைஞர்கள் வேண்டும்
தரணியில் சமத்துவம் நிலைத்திட வேண்டும்

திரு.துரைசிங்கம் சிவானந்தன்.
பொருளாளர்.
ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம்
கிளிநொச்சி



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்கள் நலனில் இற்றை வரை அக்கறை கொண்டு செயற்பட்டு கொண்டிருக்கும் எமது “பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின்” தலைவராக இருந்து பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பினால் இவ்வாண்டும் வெளிவரும் இவ் **“இளங்கதிர்:-02”** இதழிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இப் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் சிறந்த விழுமியங்களையுடைய இளைஞர் சமூகத்தை கட்டியெழுப்புவதனூடாக மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் பங்களித்தல் எனும் நோக்கில் உருவாக்கப்பட்டதுடன் தமது கலை, கலாசார, பாரம்பரியங்களையும் மற்றும் வரலாற்றினையும் பாதுகாக்கும் எண்ணத்துடன் உத்வேகமாக செயற்பட்டும் வருகின்றது.

அதனடிப்படையிலேயே எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் தமது செயற்பாடுகளை வரலாறாக்கும் முயற்சியில் இவ்வாண்டிதழை வருடா வருடம் வெளியீடு செய்கின்றது. இவ் வெளியீடுகள் அனைத்தும் என்றோ ஒரு நாள் கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்கள் ஆற்றிய பங்கு என்ன? எனும் கேள்விக்கு விடையாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

அந்த வகையில் இளங்கதிர்:-02 மிகச் சிறப்பாக வெளிவர உழைத்த பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் இதழ்க் குழு, இவ்விதழ் வெளிவர பக்க பலமாக இருந்து உதவி புரிந்த நிறுவனங்கள் மற்றும் ஆக்கங்களை உவந்தழித்த இளைஞர்களுக்கு அவர்களது அர்பணிப்பான சேவைக்கு நன்றி தெரிவிப்பதுடன் இவ்விதழ் மிகச் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.




செல்வி.கேஜிதா பாலச்சந்திரன்.
தலைவர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# வெளியீட்டுரை

எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்களுடைய நலனில் மிகவும் அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் ஒரு இளைஞர் அமைப்பு ஆகும். இவ்விளைஞர் அமைப்பானது தனது இரண்டாவது வருடத்தை பூர்த்தி செய்யும் முகமாக “**இளங்கதிர்:-02**” எனும் ஆண்டிதழினை வெளியீடு செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.

எமது ஆண்டிதழில் இம் முறை பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் ஒரு 2020 ஆம் ஆண்டு காலத்திற்குரிய செயற்பாடுகள் பற்றியும், அமைப்பின் உறுப்பினர்களாக இருக்கும் இளைஞர், யுவதிகளின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவர வேண்டும் என்னும் நோக்குடன் **இளங்கதிர்-02** வெளி வருவது விசேட அம்சமாகும்.

எமது வடக்கு மாகாணம் சார்ந்து கிளிநொச்சி மாவட்டம் சாரந்து அல்லது மாவட்டத்தில் உள்ள பிரதேசங்கள் மற்றும் கிராமங்களின் கதைகளை, வரலாறுகளை, தனித்துவ அடையாளங்களை தாங்கியும் கலை, கலாசார படைப்புக்களைத் தாங்கியும் வெளிவருவதுடன் மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் பற்றியும் இதில் படைப்புக்கள் அமைவது இவ்வாண்டிதழின் சிறப்பம்சமாகும்.

எமது இவ் 2020 ஆம் ஆண்டிற்குரிய 02 ஆவது இளங்கதிர் ஆண்டிதழ் வெளியீட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் மற்றும் பங்களிப்பையும் வழங்கிய நிறுவனங்களுக்கு நாம் மகிழ்வுடன் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எம்முடைய இவ் இரண்டாவது முயற்சிக்கு பேராதரவு வழங்கி உற்சாகப்படுத்தும் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் எம் இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள் எமது நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இவ்விதழ் வெளியீட்டுக்காக ஆசிச் செய்திகள், வாழத்துச் செய்திகள், மற்றும் ஆக்கங்களை வழங்கியவர்களிற்கும், இவ்விதழினை செவ்வனே அச்சுப்பதிப்பு செய்த பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**-இதழ்க்குழு-**

# அமைப்பின் அறிமுகம்

- அமைப்பின் பெயர் :- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு
  BIRDS OF AFFECTION YOUTH ORGANIZATION
- அமைப்பின் தோற்றம் :- 2018.11.05
- அமைப்பின் முகவரி :- இல:-19, திருநகர் வடக்கு. திருநகர், கிளிநொச்சி
- அமைப்பின் பதிவிலக்கம் :- KN/GA/DPS/2020/01
- தொலைபேசி இலக்கம் :- 074-0055551 / 074-0055552
- மின்னஞ்சல் முகவரி :- lovebirdsyouthorganization@gmail.com
- மகுட வாசகம் :- மாற்றம் ஒன்றே மாறாதது.
  Change is Unchanged
- செயற்பாட்டு எல்லைப் பிரதேசங்கள் :- கரைச்சி
  கண்டாவளை
  பச்சிலைப்பள்ளி
  பூநகரி
- செயற்பாட்டு எல்லை மாவட்டம் :- கிளிநொச்சி
- செயற்பாட்டு எல்லை மாகாணம் :- வடக்கு மாகாணம்

# தூரநோக்கு

நற்பண்புகளுடன் கூடிய
ஆளுமை மிக்க
இளைஞர் சமூகத்தை உருவாக்குதல்.

# பணிக்கூற்று

செயற்படும் பிரதேசத்தில் அல்லது மாவட்டத்தில்
சமூக, பொருளாதார, உளவியல் மற்றும்
சிறந்த விழுமியங்களை
இளைஞர், யுவதிகளிடம் ஏற்படுத்துவதன் மூலம்
செயற்படும் பிரதேசத்தின் அல்லது மாவட்டத்தின்
பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துதல்

# உறுதியுரை

பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின்
உறுப்பினர்களாகிய நாம்
இளைஞர் அமைப்பின் வழிகாட்டலில்
கல்வி, அறிவு, ஆற்றல்
நற்பண்புகளைப் பெற்று
எமது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதுடன்
இனம், மொழி, நாட்டுப்பற்றோடு
இலங்கைத் திருநாட்டின்
நற் பிரஜைகளாக திகழ்வோம் என்றும்
எம் உயர்வே தன் செயற்பாடென இயங்கும்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்புக்கும்,
அதன் யாப்பு விதிகளுக்கும் மதிப்பளித்து
என்றும் நன்றியுணர்வுடன் செயற்படுவோம் என
உறுதி கூறுகின்றோம்.

# பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் நிர்வாக அங்கத்தவர்கள்



- முழுப்பெயர்:- செல்வி.கேஜிதா பாலச்சந்திரன்
- பதவி நிலை:- தலைவர்
- முகவரி:- 143/3, தருமபுரம், கிளிநொச்சி
- தொலைபேசி இலக்கம்:- 0771630653
- மின்னஞ்சல் முகவரி:- kejithabalan@gmail.com



- முழுப்பெயர்:- செல்வி.தமிழினி மகேந்திரன்
- பதவி நிலை:- செயலாளர்
- முகவரி:- 48, கிருஸ்ணபுரம், கிளிநொச்சி
- தொலைபேசி இலக்கம்:- 0776051775
- மின்னஞ்சல் முகவரி:- thamilinymakenthiran@gmail.com



- முழுப்பெயர்:- செல்வன்.தர்மதேவன் வினோஜன்
- பதவி நிலை:- பொருளாளர்
- முகவரி:- 11, வின்சன் வீதி, திருவையாறு, கிளிநொச்சி
- தொலைபேசி இலக்கம்:- 0767339916
- மின்னஞ்சல் முகவரி:- vinoyan17@gmail.com




- முழுப்பெயர்:- செல்வன்.விஜயகுமார் யுவராஜ்
- பதவி நிலை:- உப தலைவர்
- முகவரி:- 201, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி
- தொலைபேசி இலக்கம்:- 0766569996
- மின்னஞ்சல் முகவரி:- info.yuvi97@gmail.com



- முழுப்பெயர்:- செல்வன்.சிவகுமார் திருமாறன்
- பதவி நிலை:- உப செயலாளர்
- முகவரி:- தொண்டமாநகர், கிளிநொச்சி
- தொலைபேசி இலக்கம்:- 0773652586
- மின்னஞ்சல் முகவரி:- stmaran001@gmail.com

- உறுப்பினர்கள் மொத்தம் 08 பேர் (கிளிநொச்சி மாவட்டத்தின் 04 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் 02 பேர் படி)

# பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் கட்டமைப்பு



# பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் 2020 ஆம் ஆண்டின் செயற்றிட்டங்கள்

- அமைப்பின் பதிவு நடவடிக்கைகள்
- கணக்கறிக்கை – (2018.12 – 2019.03)
- அமைப்பின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கல்.
- மாதாந்த கலந்துரையாடல்கள்
- கட்டமைப்புக்களை வலுப்படுத்தல்.
- இளைஞர்களூடாக சமாதான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.
- போசாக்கு உணவுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்
- சமூக பணிகளில் இளைஞர்களின் பங்களிப்புக்கள்
- சமூக மட்ட அமைப்புக்களுடனான ஒருங்கிணைந்த செயற்றிட்டங்கள்.

# இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்

# 1. அமைப்பின் பதிவு நடவடிக்கைகள்


- 2018.11.05 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வருகின்றமையை உறுதிப்படுத்தி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைப்பின் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

- இவ் அமைப்பின் பதிவுச் சான்றிதழானது அமைப்பின் KN/GA/DPS/2020/01 எனும் பதிவிலக்கத்துடன் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர்/அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் அவர்களது கையொப்பத்துடன் பெறப்பட்டது.

- 2020.07.22 அன்று மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு.அ.கேதீஸ்வரன் மற்றும் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் திரு.சத்தியசீலன் அவர்களால் தலைவர் மற்றும் செயலாளருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

- எமது அமைப்பின் பதிவு நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்த ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் சில நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் உளமார்ந்த நன்றிகள்.

- படங்கள் கீழே…



**Certificate of Registration of Voluntary Social Services/Non Governmental Organization under Voluntary Social Services Organizations (Registration & Supervision) Act, No. 31 of 1980 as amended by Act, No. 8 of 1998**

By virtue of the powers vested in me under section 5 read with section 2 of the above Act, I Mrs. R. Ketheeswaran the Deputy/ Assistant Registrar of Voluntary Social Services / Non Governmental Organizations do hereby certify that Birds of Affection Youth Organization
(Name of the Organization)

of No-19, Thirunagar North, Thirunagar, Kilinochchi has been
(Address of the Organization)

Registered as a Voluntary Social Services/Non Governmental Organization at the District Secretariat/Kachcheri/Divisional Secretariat Kilinochchi

Registration No. : KN/GA/DPS/2020/01

Date : 16/07/2020

MRS.R.KETHEESWARAN GOVERNMENT AGENT/ DISTRICT SECRETARY KILINOCHCHI DISTRICT

Deputy/Assistant Registrar,
District Secretary/Govt. Agent,
Divisional Secretary.



## 2. கணக்கறிக்கை :- 2018.12 - 2019.03

# FINANCIAL STATEMENTS

**BIRDS OF AFECTION YOUTH ORGANIZATION**

**NO-19,1ST LANE,**
**THIRUNAGAR NORTH,**
**KILINOCHCHI.**

**MARCH 31, 2019**

**FINANCE & ACCOUNTS**
**நிதி & கணக்கீடு**
கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனை நிறுவனம்

**SUP POST OFFICE, KARADIPOKKU JUNCTION,**
**KILINOCHCHI.**
**T.P-0772487206, 0715412138**

**BIRDS OF AFFECTION YOUTH ORGANIZATION**
**NO-19,1ST LANE, THIRUNAGAR NORTH, KILINOCHCHI.**

**STATEMENT OF FINANCIAL POSITION AS AT END OF MARCH 2019**

| ASSETS | LKS | LKS |
|---|---|---|
| **Non-Current Assets** | | |
| Property Plan and Equipment | | 6.090.00 |
| **CURRENT ASSETS** | | |
| Cash at Hand | 10.200.00 | 10.200.00 |
| **TOTAL ASSETS** | | 16,290.00 |
| **EQUTTY AND LIABILITIES** | | |
| Accumulated Fund | | 5,962.00 |
| Surplus | | 4.983.00 |
| **CURRENT LIABILITIES** | | |
| Accrued Expenditure-Abinayan | 5,345.00 | 5,345.00 |
| **TOTAL EQUTTY AND LIABILITIES** | | 16,290.00 |

President     Secretary     Treasurer

the above financial position as at 31 March 2019 and attached income statement for the year then ended, have been prepared accounting to the books of account. records maintained and information provided by treasurer.

NA ACCOUNTANT KILINOCHCHI. TAX CONSULTNAT

**BIRDS OF AFFECTION YOUTH ORGANIZATION**
**NO-19,1ST LANE, THIRUNAGAR NORTH, KILINOCHCHI.**

**STATEMENT OF COMPREHENSIVE INCOME FOR THE YEAR ENDED 31ST MARCH 2019**

| | LKS | LKS |
|---|---|---|
| **INCOME** | | |
| Membership Fees | 9,450.00 | |
| OSID Received | 157,075.00 | |
| English Book and Class | 2,000.00 | |
| | | 168,525.00 |
| | | 168,525.00 |
| **EXPENSES** | | |
| Leadership programmer | 84,935.00 | |
| English book print | 31,237.00 | |
| Refreshment expenses | 2.655.00 | |
| Bill book | 800.00 | |
| Traveling Expenses | 3,000.00 | |
| Certificate Ceremony Expenses | 38,785.00 | |
| Memorial Gift | 850.00 | |
| Ledger Book | 230.00 | |
| Photo Copy Expenses | 950.00 | |
| Dialog Card | 100.00 | 163,542.00 |
| surplus | | 4,983.00 |

NA ACCOUNTANT
KILINOCHCHI
TAX CONSULTNAT

# தீராத பட்டினி.

குடிசைத் தட்டியை அவிழ்த்த படி முன் திண்ணையை பாக்கியம் பார்த்த போது சண்முகம் படுத்திருந்த பாய் ஒரு பக்கத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. மூலை கிழிந்து போய் இத்துப்போன பனையோலைப் பாய் நிறம் மாறி அழுக்கேறிப் போயிருந்தது. இருள் முற்றாக நீங்கி நிலம் வெளிக்காத அதிகாலை வேளை குடிசைக்குள் நான்கு பிள்ளைகளும் குறுக்கும், நெடுக்குமாக படுத்திருந்தன.

‘‘தேத்தண்ணி கூட குடிக்காமல் சங்க கடைக்கு நம்பர்த் துண்டு எடுக்க பாவி மனிசன் நேர காலத்தோட எழுந்து போட்டுது’’ என்று மனதிற்குள் பாக்கியம் கவலையோடு முனுமுனுத்தாள். இராத்திரியும் ஆமான சாப்பாடில்லை. பங்கீட்டு கார்ட்டிற்கு அரிசி வந்தால் தான் உலை இன்டைக்காவது கொதிக்கும்.

முற்றம் இன்னமும் வெளிக்கவில்லை. நேற்று அதிகாலை ஊரடங்கு சட்டம் நீங்கியும், நீங்காத வேளையில் சங்க கடைக்கு எழுந்தோடிப் போனான். எழுபத்தைந்து நம்பருக்கு மேல் ஒரு நாளைக்கு கொடுக்க முடியாதென மனேஜர் கூறி மறுத்து விட்டான். அதிகாலையிலேயே சனம் சங்க கடை வாயிலை மொய்த்துக் கியூவில் இடம் பிடித்துக் கொண்டது. ஏமாற்றத்தோடு சண்முகம் இரண்டு இறாத்தல் பாணுடன் திரும்பி வந்தான். அவற்றை பெறவே நீண்ட கியூவில் நிண்டிருந்த சண்முகத்தின் உச்சித் தலை கொதித்து உள்ளங்காலை சுடுமணல் வேக வைத்திருந்தது. மத்தியானம் சோறு கிடைக்குமென எதிர்பார்த்திருந்த பிள்ளைகள் தாயை ஏமாற்றத்தோடு பார்த்தன.

‘‘இன்டைக்கும் பாணாம்மா? என்று கடைசி மகன் குஞ்சுராசா சிணுங்கினான்.’’ பத்து வயசு தான் ஆகிறது. கண்ணெடுத்தும் பார்க்க முடியாமல் கண்கள் கலங்கிய படி சண்முகத்தை பார்த்தவள் தன்னை சுதாகரித்து கொண்டு ‘‘நாளைக்கு குஞ்சுக்கு சோறு தாறன்’’ என்று கூறிக்கொண்டு களை படிந்திருந்த அவன் முகத்தை சேலைத் தலைப்பால் துடைத்து விடத்தான் முடிந்தது.

இந்தப் பஞ்சக் காலத்தில் கூலி வேலை கிடைப்பதே கஸ்டம். இரண்டு நாட்களாக கஸ்ரப்பட்டு வேப்பமரம் ஒன்றை தறித்து விறகாக்கி கொடுத்து கிடைத்த காசைக் கொண்டு தான் சங்கக்கடைக்கு போனான். அங்கும் பங்கீட்டுச் சாமான் கிடைக்கவில்லை. ஆனால் இரண்டு நாட்களாக கூலி வேலைக்கு செல்ல முடியவில்லை.

‘‘இனி நான் போரன் சாமான் வாங்க… நீங்க வேலைக்கு போங்க’’ என்றாள் பாக்கியம்.

கவலை தோய்ந்த முகத்துடன் ‘‘உன்னால் வெயிலில் நிற்க முடியாது பாக்கியம். ஆமான சாப்பாடில்லை. நீரிழிவுக்கு ஒழுங்கான மருந்தும் சாப்பிடவில்லை. கிளினிக்குக்கு போன தடவை போகாததால் ஆஸ்பத்திரியில் மருந்து எடுக்கவில்லை. இல்லாத மருந்தை வெளியில் வாங்கவும் காசில்லை. மருந்துக் கடைகளில் இருந்தவற்றையும் சனம் அளவு கணக்கின்றி அள்ளிக் கொண்டு போயிட்டுது.

படுக்கையிலிருந்து மூத்தவள் எழுந்து வெளியே வந்தாள். இருபத்தைந்து வயதாகின்றது நல்ல வளர்த்தி. பார்ப்போரைச் சுரண்டியிருக்கும் தோற்றம் வீதியிலே ஊர் நாய்கள் குரைக்க ஊர்வலம் வருகின்ற இளம் காளையர்களின் பார்வை அவளில் பட்டு விடக் கூடாது என்பதில் வெகு கவனமாகப் பாக்கியம் இருந்தாள்.

இவளுக்கு அடுத்தவளாக இருந்தவள் தான் சாந்தி பெயரிற்கு ஏற்றாற் போல் அமைதியான சாந்தமான குணம் கொண்டவள். இவளுடைய நடையைக் கண்டு அன்னம் கூட வெட்கமுற்றுத் திரும்பும் அளவிற்கு பார்போரைக் கவரும் கன்னியாய் இருந்தாள். கால நதியின் ஓட்டத்தில் பிள்ளைகள் வளர்வதையும் மூத்தவள் சுபாவை ஒரு கரை சேர்ப்பது பற்றியும் ஆழமான நினைவுடன் இருந்த பாக்கியத்தின் நினைவை கலைத்தபடி ‘‘அம்மா தண்ணீர் எடுத்து வாரன்’’ என்றபடி வாசலில் தண்ணீர்க் குடத்துடன் வந்து நின்றாள் சாந்தி. சரி என்று மெல்லத் தலையசைத்தாள் பாக்கியம்

‘‘அடுப்பை மூட்டு பிள்ளை’’ என்று மூத்தவளுக்கு கட்டளை இட தலை சுற்றுவது போல் இருக்க அப்படியே குந்தில் அமர்ந்து கொண்டாள் பாக்கியம். தலை சுற்றி மயக்கம் போல வந்தால் சுகர் குறைந்திருக்கும் அல்லது கூடியிருக்குமென டாக்டர் கூறியிருந்தார். இம்முறை சுகர் குறைந்திருக்காது. ஒழுங்காக மெர்போமின் பாவிக்கவில்லை.

என்னம்மா? என்ற படி குஞ்சுராசன் ஒடி வந்து தனது பிஞ்சுக் கரங்களால் தாயை அணைத்தபடி முத்தமிடுகிறான்.‘‘ஒண்டுமில்ல… லேசாகத் தான் தலையை சுற்றியது. இப்ப எல்லாம் சரி.’’ என்ற படி குஞ்சுராசாவை அணைத்துக் கொண்டு கண்ணீர்ப் பூக்களை சொரிந்தாள் பாக்கியம்.

மூன்று மாதங்கள் ஆகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் நிலவிய சமாதனம் ஒரு இரவுடன் கலைந்து போனது. A9 நெடுஞ்சாலை முன் அறிவிப்பு இன்றி பூட்டப்பட்டதோடு முதல் நாள் கடைகளில் குவிந்திருந்த உணவுப் பொருட்களும், பால்மா வகைகளும் காணாமல் போயின. அவற்றில் சில தெருவோர தரைக் கடைக்கு வந்தன. எஞ்சியிருந்தவையும் பண வசதியுள்ளோரால் அள்ளிச் செல்லப்பட்டன.

பொதுக் கிணற்றடிக்கு நீர் எடுக்க சென்று கொண்டிருந்த சாந்தியை இடை மறித்த படி அழகான இளம் வாலிபன் ஒருவன் ஓடி வந்து கொண்டிருந்தான். அவன் வேறு யாருமில்லை. பக்கத்து வீட்டு விதானையாரின் மகன் குமரன் தான். ‘‘ஏய் சாந்தி உனக்காக நான் எவ்வளவு நேரம் வெயிட் பண்ணியிருக்கிறன். ஏன் இவ்வளவு லேற்? என்று கதையை தொடங்கினான். ‘‘ஒன்டுமில்லை’’ என்ற பதில் இலாசாக குமரனைப் பார்த்து கன்னத்தில் குழி விழ சிரித்தாள். அவளுடைய அந்தச் சிரிப்பில் ஆயிரம் அர்த்தம் இருந்தாலும் அது அவனை சொர்க்கத்தக்கே கொண்டு சென்று விட்டது போல ஒரு உணர்வு.

குமரனும், சாந்தியும் ஒரே பாடசாலையில் சிறுவயது முதல் ஒன்றாக படித்து வந்தார்கள். வகுப்பறையிலேயே சாந்தி தான் அழகானவளும், கெட்டிக்காரியும் கூட. ஆனால் குமரனோ சுட்டிக்கார குழப்படிப் பையன். ஆசிரியர் படிப்பிக்க வகுப்பிற்கு வந்தால் அவனுக்கு காய்ச்சல் வந்து விடும். இப்படியே நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நாட்கள் நகர்ந்தன. குமரனோ ஒழுங்காக படிப்பதில்லை என்று விதானையார் அப்பாவிடம் கூறியது சாந்திக்கு மனக் கவலையை உண்டு பண்ணியது.

ஒரு நாள் இடைவேளை நேரம் குமரன் சக மாணவர்களுடன் சண்டை பிடிப்பதை கண்ட சாந்தி ஓடிச் சென்று அவனைப் பிடித்து இழுத்தாள். அன்று தான் சாந்தியும், குமரனும் ஒருவரை ஒருவர் முதலில் சந்திக்கின்றனர். குமரன் அப்படியே அசைவற்று நின்றான். சாந்தியின் உதடுகள் மெல்ல விரிந்து வார்த்தைகளை சொரிகிறது. ‘‘குமரன் நான் ஒன்று சொல்லுவன் கோபிக்க கூடாது. ஏன் இப்படி குழப்படி செய்து பொழுதை வீணடிக்கிறீங்கள்? ஒழுங்கா படிச்சா உங்களுக்கும் உங்களுடைய அப்பா, அம்மா எல்லோருக்கும் தானே பெருமை. என்று கூறியவள் மெல்லக் கையை அசைத்து நல்லா முடிவெடுங்கோ’’ என்ற படி ஓடி மறைந்து விட்டாள்.

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் குமரனின் ஆழ் மனதைத் துளைத்துச் சென்றது. அன்று முடிவெடுத்தவன் தான்... வகுப்பிலேயே கெட்டிக்கார பையனாய் அந்த சுட்டிப்பையன் மாறி விட்டான்.

நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன. குமரனுக்கு சாந்தி மேல் அளவில்லா பிரியம் ஏற்பட அவளைப் பிரிய மனமில்லாமல் அவள் மேல் காதல் செடியை வளர்த்தான். அன்று பள்ளிப் பருவத்தில் தொடங்கிய காதல் இன்று நான்கு வருடங்கள் ஆகியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இவர்களது காதல் தினமும் சாந்தி நீர் எடுக்க வரும் போது குமரனும் வந்து விடுவான் சாந்தியின் முடிவை கேட்பதற்காய்... ''காலம் தான் பதில் சொல்லும்'' என்ற படி நீர்க் குடத்துடன் நடந்தாள் சாந்தி.

மறுநாள் விடிகாலைப் பொழுதில் வீதியில் ஏறிய போது நகர்ப்புறம் சற்றே விழித்துக் கொண்டது.

பேக்கரிக்கு முன் காலைப் பாணுக்காக நிண்ட ''கியூ வரிசை'' நின்றிருந்தது. அனுமானின் நீண் வால் போல் அந்தக் கியூ வரிசை நீண்டிருந்தது. காலை பத்து அல்லது பதினொரு மணிக்குத் தான் பாண் விநியோகம் நடக்கும். ஒரு வேளைப் பாணுடன் பொழுதைக் கழிக்கின்ற குடும்பங்கள் அவ் வரிசையில் நின்றிருந்தன.

''சந்தையில் அரிசி நூறு ரூபாவுக்கு போல... ஒரு தேங்காய்ப் முட்டுக்காய் பதத்தில் அறுபது ரூபாவுக்கு போல... சீனி விலையும், உப்பு விலையும் ஒன்று... பாண் கூட கிடைக்காது. மருந்து கடைகளில் பனடோலும் இல்லை.

சங்க கடை கியூ மெதுவாக நகர்ந்தது. தலை சுற்ற சண்முகம் நகர்ந்தான். சரியாய் பசிக்குதம்மா... என குஞ்சுராசா தாயிடம் இரந்தான். அவனைக் கவலையோடு பாக்கியம் ஏறிட்டாள். ''கொஞ்சம் பொறு குஞ்சு.. அப்பா அரிசியோட வருவார். இண்டைக்கு சோறு சமைச்சு தாறன்'' என்றாள்.

ஏமாத்திறியள்… நேற்றும் இப்படித் தான் சொன்னனீங்க, சோறு சாப்பிட்டு எத்தனை நாளாச்சு? பசி வயிற்றை கிள்ளுது. அப்பாவைக் காணவில்லை. பாணாவது வாங்கித் தா? நீ காசைத் தாம்மா... நான் பேக்கரியில வரிசையில நிண்டு வாங்கி வாரன்.

பாக்கியதுக்கு குஞ்சுராசாவை சமாளிக்க வேறு மார்க்கம் தெரியவில்லை. பாண் கியூ இப்போது முடிந்திருக்கும். சண்முகம் வரும் வரை அவனை சமாளிக்க வேண்டும். பாக்கியம் சேலை முடிச்சை அவிழ்த்து பணத்தை எடுத்து கொடுத்தாள்.

''கவனமடா தம்பி! பாத்து போ... காசை எங்கையாவது போட்டிடாத...'' பணத்தை வாங்கி கொண்டு குஞ்சுரசா ஓடினான். அவன் சென்ற சில நிமிடத் துளிகளில் எறிகணைக் குண்டுகள் டப் டுப் என வெடிக்கின்ற சத்தம் எழுந்தது. பாக்கியம் துடிதுடித்து போனாள்.

''தம்பி போனவன். பாத்திட்டு வாரன் பிள்ளை...!'' என்ற படி வீதியில் இறங்கினாள். எங்கைகேயோ தூரத்தில் கேட்குதம்மா... எதிரே களமுனையில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது யாரோ எறிகணைத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அவர்களும் அதற்கு பதிலாக வீசிய எறிகணைகளில் ஒன்றிரண்டே சங்கக்கடை அருகிலும் விழுந்தது.

அரிசி, சாமான் வாங்கி ஒரு மூட்டையில் போட்டுக் கட்டியபடி தலையிலே மூட்டையைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு 50 மீற்றர் தூரம் தான் சண்முகம் வந்திருப்பான். எங்கிருந்தோ வந்த எறிகணை வீழ்ந்து வெடிக்க தவறவில்லை.

எறிகணைத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் “ஐயோ! என்னை காப்பாற்றுங்கோ” என்று அலறியபடி ஓடினார்கள். பாவம் சண்முகம் அவன் அருகில் வெடித்த எறிகணைத் துண்டு நெஞ்சுப் பகுதியை பதம் பார்த்தது. ஐயோ என்று கத்துவதற்கு கூட நாதியற்றவனாய் நெஞ்சினிலே குண்டேந்தி சுடு மணலில் சாய்கின்றேன்.

தூரத்திலே ஓடி வந்த குஞ்சுராசா சண்முகத்தின் தலையிலிருந்து அரிசி மூட்டை கீழே விழுந்து சிதறுவதை கண்டு “அப்பா” என்று அலறியடித்த படி ஓடி வந்து தந்தையை கட்டிப் பிடிக்கிறான்.

குஞ்சுராசாவின் அலறலை கேட்டு ஓடி வந்த பாக்கியம் முழங்கால் மண்டியிட்டு சண்முகத்தை அணைத்து கதறுகிறாள். யார் செய்த பாவமோ? ஒன்றும் அறியாத அப்பாவியாய் சின்னஞ்சிறு பாலகன் குஞ்சுராசா எதிரே சிந்திக் கிடந்த அரிசி மணிகளை ஒன்று சேர்ப்பதில் மும்முரமாய் ஈடுபடுகின்றான்.

பாவம் பசித்த அவனது வயிறு இதைத் தாங்குமா?

செல்வன்.வேலழகன் லுதர்சன் (ஆதி)
உறுப்பினர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

**நல்லவனாய் இரு...**

**ஆனால்**

**அதை நிரூபிக்க நினைக்காதே...**

**ஏனென்றால்**

**அதை விட முட்டாள் தன செயற்பாடு**

**எதுவுமில்லை.**

# 3. அமைப்பின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கல்

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது சந்தாப்பணம் மற்றும் அங்கத்துவப்பணம் செலுத்தி உறுப்பினர்களாவோருக்கு அதை உறுதிப்படுத்தும் வகையில் அடையாள அட்டையினை விநியோகம் செய்யும்.

- இந்த அடையாள அட்டைக்கான புகைப்படமானது முத்திரை அளவில் இருப்பதுடன் புகைப்படத்தின் பின்னிறமானது சிவப்பு நிறமாகும்.

- இவ்வடையாள அட்டையினை பெறுபவர்கள் அதற்கு முதலில் அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உறுதிப்படுத்துவதனூடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.

- அடையாள அட்டையின் இலக்கமானது உறுப்பினராக இணைந்து கொள்ளும் இலக்கத்துடன் ஒத்ததாக காணப்படும்.

- இவ்வடையாள அட்டையானது 2020.07.22 அன்று எமது அமைப்பின் செயலாளர். செல்வி. தமிழினி மகேந்திரன் அவர்களால் உத்தியோகபூர்வமாக உறுப்பினர் ஒருவருக்கு கையளிப்பதனூடாக வெளியீடு செய்யப்பட்டது.

- படங்கள் கீழே:-

01. அடையாள அட்டை வடிவம்
(கீழே உள்ள படம் உரிய உறுப்பினரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது)







02. அடையாள அட்டை உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்த போது...






# தற்கொலைக்கு தீ வைப்போம்

யாழ் தேவியின் தண்டவாளத்தில்
நசுங்கிப் "போகின்றன"
பிஞ்சுத் தலைகள்...

நைலோன் கயிறுகளின்
முடிச்சில் இறுகிப் போகின்றன
பலரின் கனவுகள்

மருந்து பாட்டில்களின் தலைகளில்
திறக்கப்படுகின்றன
எமனின் கதவுகள்

மரணத்தின்
வாசலுக்கு
விசா கேட்பவர்களே!!!

கொஞ்சம்
நில்லுங்கள்

எஞ்சிக் கிடக்கும்
வாழ்க்கையை
எரித்து விடாதீர்கள்!

காதலுக்காய்
இறப்பதென்றால்
பாதி மனிதர்க்கு
கல்லறை தான்...

தோல்விக்காக
சாவதென்றால்
வாழ்வில் எல்லோரும்
என்புகள் தான்...

கிளை முறிந்ததற்காய்
மரம் இறந்து போவதில்லை

மழை இல்லையென்று
மண் தூக்கில் தொங்கவில்லை

வறுமையென்று
எந்தப் பறவையும்
வாழ்க்கையை தொலைத்தில்லை

என் தோழனே!
இறப்பதற்கு முன்
கொஞ்சம் இதயத்தோடு பேசு...

துரோகங்களை எல்லாம்
மன்னித்து விடு
துயரங்களை எல்லாம்
மறந்து விடு...

அப்போது
நீ தான்
நிகழ்கால
"இயேசு"...

செல்வன்.சர்வேஸ்வரன் வில்வரசன்
உறுப்பினர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு


# 4. மாதாந்த கலந்துரையாடல்கள்

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் மாதாந்த கலந்துரையாடல்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுண்டு.

- ஆயினும் இவ்வருடம் நாட்டில் கொவிட்-19 தாக்கத்தால் கலந்துரையாடல்கள் எதையும் பெரிதாக நடாத்த முடியவில்லை என்றாலும் இந்த வருட அரையாண்டுக்கான பொதுச்சபைக் கூட்டம் மற்றும் ஓரிரு கலந்துரையாடல்களை நடாத்தினோம்.

- படங்கள் கீழே…





# வெற்றியைத் தேடி...

ஓர் இலட்சியத்தை அடைவதற்காக சோகங்களை மிதித்து சோதனைகளைப் பல்லைக் கடித்துக் கொண்டு தாங்கி, இரவுகளில் அழுது... நாம் நம்புவது சரி தான் என்று ஆணித்தரமாக மனதினில் பதித்து, வெறித்தனமாக அலைந்து திரிந்தால் தான் "வெற்றி" என்பது எமக்கு சாத்தியமாகின்றது.

ஆம்! மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருமே தம் கருவில் தொடங்கி கல்லறை வரை ஏதோ ஒரு வகையில் இந்த வெற்றிக் கனியைப் பெற்று தம் வாழ்வை இன்பமயமாக்க போராடிக் கொண்டே இருக்கின்றார்கள். இப் போராட்டத்தில் சிலர் வெற்றியைப் பெற்று இன்பமாய் வாழ, பலர் தோல்வியால் கட்டுண்டு மன விரக்தியுற்று துன்பத்தை எதிர் கொள்கிறார்கள். அதிலும் இதில் துன்பத்தை எதிர் கொள்பவர்கள் இளைஞர், யுவதிகள் என்பது தான் வருத்தத்திற்குரிய விடயம்.

குறிப்பாக சிறுவர்கள் தாம் விரும்பிய விளையாட்டுப் பொருட்களை அடைவதற்காக போராடுவார்கள். மாணவப் பருவத்தினர் பரீட்சை மற்றும் ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளில் வெற்றி பெறப் போராடுவர். இளைஞர், யுவதிகள் சிறந்த தொழில் வாய்ப்பு, உன்னத மண வாழ்க்கை வளமாக அமையப் போராடுவர். வயது வந்தோர் மன நிம்மதியான ஆண்மீக வாழ்க்கையைப் பெறுவதற்காக போராடுவர்.

இத் துன்பத்தால் துவண்டிருக்கும் மனித மனங்களை ஆற்றுப்படுத்தி அவர்களை சரியான பாதையில் வழி நடாத்தி உரிய வெற்றியை அடையச் சில வழிமுறைகளை கூறுவதாய் அமைவதே இக் கட்டுரையின் நோக்கமெனலாம்.

ஒருவரது வெற்றிக்கு அவரது...

- இலட்சியம்
- இறை நம்பிக்கை
- தன்னம்பிக்கை
- விடாமுயற்சி
- பிரச்சினைகள்

என்பனவே பக்க பலமாய் இருந்து தொழிற்படுகின்றன எனலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு இலட்சியம் கண்டிப்பாக இருக்கலாம். இவ் இலட்சியங்களே அவனது வெற்றிக்கு அத்திவாரம் என்று கூறலாம். இலட்சியம் இல்லாதவனின் வாழ்க்கை துடுப்பில்லாத படகை போன்று திசை மாறி போய் வாழ்வையே இருள் மயமாக்கி விடும். இதனை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் உயர்ந்து இலட்சியம் ஒன்றை நிலையாய் எம் மனதில் நிலை நிறுத்தி வெற்றிப் பாதையில் பயணிக்கத் தொடங்க வேண்டும்.

இவ் வெற்றிப் பாதையில் குறித்த இலட்சியத்தை அடைய பயணத்தை மேற்கொள்ளும் போது பல்வேறு தடைகள், துன்பங்கள், விமர்சனங்கள் வந்து எம்மைப் பயமுறுத்தி எம் இலட்சியத்தை தகர்த்து எறிய முற்படலாம்.

ஆனால் இவற்றை சவாலாய் ஏற்று துணிவுடன் போராடினால் தான் நாம் வெற்றிக் கனியை எட்ட முடியும். ஆம்! வாழ்க்கை என்பது போர்க்களம். இதில் இரத்தங்களும், இரணங்களும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் இவை தான் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. என்பதை உணர்ந்து குறித்த இலட்சியத்தை அடைய நாம் உறுதிபூண வேண்டும்.

அடுத்து நாம் வெற்றிக் கனியை எட்ட பக்க பலமாய் இருக்கும் இறை நம்பிக்கையை நோக்கின் ஓர் இலட்சியத்தை அடைய முழுமையான நம்பிக்கையுடன் நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் போதும். இறைவன் நமக்கு உதவி செய்ய பல அடி எடுத்து வைத்து பல்வேறு வடிவங்களில் ஓடோடி வருவான். எமது வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்களை உருவாக்கித் தருவான். ‘‘காற்றுள்ள போதே தூற்றிக் கொள்’’ எனும் பொன்மொழிக்கு இணங்க இச் சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தினால் போதும்.

அடுத்து தன்னம்பிக்கை. இது ஒருவனுக்கு வந்து விட்டால் மலை கூட அவனுக்கு சிறு மணல் போலத் தான் தெரியும். மனிதனது வெற்றியின் பலமே அவனது நம்பிக்கையில் தான் இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. என்னால் குறித்த இலட்சியத்தை அடைவதற்காக இச் செயலை செய்ய முடியும் என நினைத்தாலே போதும் பாதி வெற்றி எம்மை வந்தடைந்து விடும். மீதி வெற்றியை நாம் செய்யும் செயல்கள் தீர்மானித்து விடும்.

அடுத்து விடாமுயற்சி. விடாமுயற்சி எம் வெற்றியை எவ்வாறு தீர்மானிக்கின்றது? வெற்றி என்பது இலகுவாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எமக்கு கிடைத்து விடாது. சில சமயங்களில் பல மணி நேரம் போராடி, பல்வேறு தோல்விகளை எதிர் கொண்ட பிறகே வெற்றி வாய்ப்பு எம்மைத் தேடி வரலாம். எனவே இதனை உணர்ந்து மனம் சோர்வடையாது தோல்விகளை எதிர் கொள்ளும் மன வலிமையை பெற்று விடா முயற்சியுடன் தொடர்ந்து போராடினால் வெற்றி எம்மைத் தேடி வரும் என்பது உறுதி. இதனையே வள்ளுவப் பெருந்தகை…

‘‘தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும்’’

என்று இயம்பியுள்ளார் தனது ஈரடிக் குறளில். மாவீரன் நெப்போலியன் வரலாறும் விடாமுயற்சியின் தத்துவத்தை எமக்கு உணர்த்தியுள்ளது. மேலும் சோர்ந்து போய் ஓரிடத்தில் நிற்கும் தேங்கிய குட்டைகளைப் பற்றி தேசங்கள் பேசுவதில்லை. மாறாக விழுந்தும், எழுந்தும் வெற்றி வாகை சூடி ஓடிக் கொண்டிருக்கும் நதிகளின் பெயர்களைத் தான் வரலாறுகள் தம் பதிவேட்டில் குறித்து வைத்திருக்கின்றது எனும் கருத்தை அடியொற்றி நாம் விடாமுயற்சியை தொடர வேண்டும்.

அடுத்து பிரச்சினைகள் ஒருவனுக்கு எவ்வாறு வெற்றியைத் தீர்மானிக்கின்றது என்பது பற்றி நோக்குவோம். பிரச்சினைகள் தான் ஒரு மனிதனுக்கு சாதனைகளைச் செய்யத் தூண்டுகின்றன என்பதையும் மறுத்து விட முடியாது. பொதுவாக விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் வெற்றிக்கு அடி நாதமாய் திகழ்ந்தவை இப் பிரச்சினைகளே.

உதாரணமாக ஆதி காலத்தில் மக்களிடையே தொடர்பாடலில் ஏற்பட்ட காலதாமதப் பிரச்சினைகளே பிற்காலத்தில் தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் என பல்வேறு சாதனங்களின் உருவாக்கத்திற்கு வழி வகுத்தன எனலாம். மற்றும் மின் குமிழ், புவியீர்ப்பு விசை, என்பனவும் பிரச்சினையின் பால் விளைந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே எனலாம்.

விதிவிலக்காக வறுமை, தாழ்வு மனப்பான்மை, போன்ற பிரச்சினைகள் ஒருவரது வெற்றியை அழிக்க வல்ல சக்தியுடையது. இவற்றை நாம் எம் மனதில் இருந்து கண்டிப்பாக அகற்றி விட்டால் தான் வெற்றி வாய்ப்பு எம்மைத் தேடி வரும். வறுமை எனும் முட்கள் ஒருவரை காயப்படுத்த நினைத்தால் அதற்காக அழுது புலம்பாமல் அவற்றை ஒருவன் தனக்கு வேலியாக மாற்றியமைத்துக் கொள்ளும் மன வலிமையை பெற்று விட்டால் வெற்றி நிச்சயம்.

அது போல தாழ்வு மனப்பான்மை எனும் எதிரியையும் நாம் மனதில் இருந்து விரட்டினாலே நாம் குறித்த இலக்கை நோக்கிய வெற்றியை அடைய முடியும். என்னால் இதை மற்றவரைப் போல் செய்ய முடியுமா? என எனது ஆற்றலில் நம்பிக்கை இல்லாது ஏனையோருடன் ஒப்பிட்டு வாழ்ந்தால் நிச்சயம் எமக்கு அது வெற்றியையோ, அல்லது சந்தோசத்தையோ தராது. இதை உணர்ந்து நாம் கவனமாக செயற்பட்டு தாழ்வு மனப்பான்மையை அகற்றி வெற்றியை நிலைபெறச் செய்ய வேண்டும்.

எனவே எமது இலட்சியம் நிறைவேற பல சோதனைப் படிக் கற்களை தாண்டி கரடு முரடான பாதைகளினூடாக நாம் பயணத்தை மேற்கொண்டால் தான் எமது வெற்றி இலக்கை அடைய முடியும். ஆதலால் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, என்பவற்றுடன் பொறுமை, நிதானம் என்பவற்றையும் கடைபிடித்து எமக்கு வரும் தோல்விகளையே ஏணிகளாக்கி….

பலவீனர்கள் பாதையில் தடைக்கல்
பலசாலியின் பாதையில் படிக்கல்
எதிரிகள் வீசும் கற்கள் - உன்
வெற்றிக்கான அத்திவாரக் கல்

எனும் உயர் சிந்தனையை மனதில் நிறுத்தி வெற்றியைத் தேடி நாம் பயணிப்போமாக…

செல்வன்.அபிமன்னசிங்கம் ஹரிகரன்
உறுப்பினர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# 5. கட்டமைப்புக்களை வலுப்படுத்தல்

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் கட்டமைப்புக்கள் 06 உள்ளன.

- அவையாவன…

01. திட்ட செயன்முறைத் துறை
02. சமூக சேவைகள் துறை
03. வருவாய்த் துறை
04. கல்வித்துறை
05. விளையாட்டுத்துறை
06. கலை, பண்பாட்டுத்துறை

போன்றவையாகும்.

- இதில் அனைத்து துறைகளுக்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த பொறுப்பாளர்களுக்கு கீழ் ஒவ்வொரு துறைக்கும் 03 பேர் கொண்ட செயற்பாட்டு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பினால் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் அனைத்தும் இதில் உள்ள 06 கட்டமைப்புக்களில் ஏதாவது ஒரு துறைக்கு கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

- தற்போது இதில் கல்வித் துறை மற்றும் கலை, பண்பாட்டுத் துறை ஆகியன செயல் நிலையில் காணப்படுவதுடன் ஏனையவற்றை செயற்படுத்த எமது அமைப்பு பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**நீ யாரிடம்**

**உன் இரகசியங்களை சொல்கிறாயோ!**

**அவரிடம் உன் சுதந்திரத்தை இழப்பாய்…**

## ➢ கல்வித் துறை

- கல்வித்துறையின் பொறுப்பாளராக செல்வன்.விமலநாதன் டினேஷ் அவர்கள் காணப்படுகின்றார்.

- அவரிற்கு கீழ் செயல் உறுப்பினர்களாக செல்வன்.சுந்தரலிங்கம் ரமேஸ்காந், செல்வன்.இராஜமூர்த்தி டனுசன், செல்வி. சர்மினி ஜெயசீலன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

- கல்வித்துறையின் தற்போயை செயற்பாடுகளாக...
  1) போசாக்கான உணவு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.
  2) புத்தகங்களை ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்.
  3) வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்து பாடசாலை மணவர்களுக்கு செயலட்டைகள் வழங்கல் செயற்றிட்டம்.

  ஆகியன காணப்படுகின்றன.

- கல்வித் துறையானது 2020 ஆம் ஆண்டு தனது செயற்குழு கூட்டத்தை பலமுறை கூட்டி தாம் செய்து வரும் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்துள்ளதுடன் எதிர்வரும் காலத்தில் செய்யவுள்ள செயற்பாடுகள் பற்றியும் ஆராய்ந்துள்ளது.

- படங்கள் கீழே...



செல்வன்.விமலநாதன் டினேஷ்
பொறுப்பாளர்
கல்வித்துறை



செல்வன்.சுந்தரலிங்கம் ரமேஸ்காந்
உறுப்பினர்
கல்வித்துறை



செல்வி.சர்மினி ஜெயசீலன்
உறுப்பினர்
கல்வித்துறை



செல்வன்.இராமமூர்த்தி டனுசன்
உறுப்பினர்
கல்வித்துறை

- கல்வித்துறையின் செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் கீழே…

- முதலாவது கூட்டம் :- 2020.06.25




- இரண்டாவது கூட்டம் :- 2020.07.03




- மூன்றாவது கூட்டம் :- 2020.07.29




- நான்காவது கூட்டம் :- 2020.08.11




# ➢ கலை, பண்பாட்டுத் துறை

- கலை, பண்பாட்டுத் துறையின் பொறுப்பாளராக செல்வி.லிப்சியா மகேந்திரம் அவர்கள் காணப்படுகின்றார்.

- அவரிற்கு கீழ் செயல் உறுப்பினர்களாக செல்வன்.சுந்தரலிங்கம் ரமேஸ்காந், செல்வன்.இராஜமூர்த்தி டனுசன், செல்வி. சர்மினி ஜெயசீலன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

- கலை, பண்பாட்டுத் துறையின் தற்போதைய செயற்பாடுகளாக…
    1. மாவட்டத்தின் பாரம்பரிய கலைகளை அழிய விடாமல் பாதுகாப்பதுடன் அதனை நிலை நாட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.
    2. விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் அரங்காற்றுகைகளை செயற்படுத்தல்.
    3. இளைஞர், யுவதிகளுக்கான கலைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை வழங்குவதுடன் ஊக்குவித்தல்.

  ஆகியன காணப்படுகின்றன.

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது கலை, பண்பாடு தொடர்பாக மாவட்ட மட்டத்தில் சேவையாற்றும் கதிரொளி கலைக்கூடம் என்ற அமைப்போடு இணைந்து கலைத் துறையின் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது. இதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளதுடன் சில செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தயாராகவுள்ளது.

- படங்கள் கீழே…



செல்வி.லிப்சியா மகேந்திரம்
பொறுப்பாளர்
கலை,பண்பாட்டுத் துறை



செல்வன்.குணரத்தினம் குகசீலன்
உறுப்பினர்
கலை,பண்பாட்டுத் துறை



செல்வி.பிரியா நடேசன்
உறுப்பினர்
கலை,பண்பாட்டுத் துறை



செல்வன்.ஆமோஸ் பேனாட்
உறுப்பினர்
கலை,பண்பாட்டுத் துறை

- கலை,பண்பாட்டுத் துறையின் செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் கீழே…

- முதலாவது கூட்டம் :- 2020.06.25




- இரண்டாவது கூட்டம் :- 2020.09.06




**எப்படியும் வாழ்ந்து விடலாம்**
**என்பதற்கு பெயர் வாழ்க்கை இல்லை**
**இப்படித் தான் வாழ வேண்டும்**
**என்பதற்கு பெயர் தான் வாழ்க்கை.**

**–ரூசோ–**

# சேகுவேரா



''சாவைப் பற்றி நான் ஒரு போதும் கவலைப்பட்டது இல்லை. நான் இறந்து போனால் எனது கைத் துப்பாக்கியை தோழர்கள் எடுத்துக் கொள்வார்கள்.
அப்போது அதிலிருந்து தோட்டாக்கள் சீறிப் பாயும்''

என்னும் வரிகள் சேகுவேராவின் வாய்களில் இருந்து அடிக்கடி உதிர்ப்பவை. ஆம்! ஐப்பசி 09 சேகுவேராவின் நினைவு தினம்.

சுயநலம் சூழ் உலகின் பொது நலத்திலும் ஒரு சுயநலம் எப்போதும் கலந்திருக்கும். அதற்கு போராட்டக்காரர்களும் விதிவிலக்கு அல்ல. தன் இனம், மதம், மொழி, நாட்டுக்கான புகழ்பெற்ற போராளிகளை உலகம் கண்டிருக்கின்றது. ஆனால் நாடு, எல்லை கடந்து போராடும் மக்களுக்காக போராடி இன்னுயிர் நீத்த இந்த உலகம் கண்ட கடைசியும், முதலுமான சிறிதளவு சுயநலம் கூட இல்லாத போராளி என்றால் அந்தப் பெயருக்கு சொந்தக்காரர் **''அர்மஸ்டோ சேகுவேரா''** தான்.

இந்தக் காலத் தலைமுறைக்கு ''சே'' என்றால் யார்? வெறுமனே ரீசேட்டுக்களிலும், கீ செயின்களிலும் சுருட்டுடன் கூடிய தாடியுடன் காணப்படும் ''சே''… உண்மையிலேயே யார் இந்த ''சே''?

**''நீ அநீதிக்கு எதிராக போராட நினைத்தால் நீயும் என் தோழன்''**

என்ற அந்த ஒற்றை வாசகம் போதும். கியூப வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மாவீரன்.

1928 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் நாள் அர்ஜன்ரீனாவில் உள்ள ரொசாரியோ என்ற இடத்தில் அர்மஸ்டோ குவேரா லிஞ், சிசிலியா டேலா செர்னா தம்பதியருக்கு முதல் மகனாக பிறந்தவர் தான் சேகுவேரா.

அப்போது சேவுக்கு வெறும் 27 வயது தான். கியூபா தனது சொந்த நாடு என்ற காரணத்தினால் பிடல் காஸ்ரோ போராட வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் சேவுக்கு அப்படியல்ல. தனக்கு முற்றிலும் சம்பந்தமே இல்லாத ஒரு தேசத்தில் அந்த நாட்டு மக்களின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து ஆயுதம் எடுப்பது என்பது உலக வரலாற்றில் எப்போதும், எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இந்தக் காரணத்தினால் தான் சேகுவேரா மனிதருள் மாணிக்கமாக போற்றப்படுகின்றார்.

1958 ஆம் ஆண்டு ஆவணி மாதம் புரட்சிப் படை கவானாவுக்குள் ஊடுருவிய போது கியூபா முழுவதும் காஸ்ரோவிடம் வந்து சேர்ந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வெற்றி உலக நாடுகள் அனைத்தையும் பெரும் வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

அப்போது டைம்ஸ் பத்திரிகையானது இவ்வாறு ஒரு தலையங்கத்தை எழுதியிருந்தது. **“புரட்சிகளின் மூளை சே”**. கியூபா விடுதலையடைந்து பிடல் காஸ்ரோ அதிபர் ஆன பிறகு புதிய அரசாங்கத்தில் சே விவசாயத் துறையின் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் பின் கியூபாவின் தேசிய வங்கியில் தலைவராக நியமனம் செய்யப்பட்டு ரூபாய் நோட்டுக்களில் சே என கையெழுத்திடும் அளவுக்கு உயர்ந்தார். பின் தொழில்துறை அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். இவ்வளவு பதவிகள் வகித்த போதும் எப்போதும் தன்னை ஒரு சராசரி குடிமகனாகவே நினைத்து விவசாயம் செய்து வந்தார்.

சேகுவேராவுக்கும், பிடலுக்கும் இடையே யுத்தத்திற்கு முன்னும், பின்னும் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவர்கள் நட்பை உயிரினும் மேலாக போற்றி வந்தனர். **அர்மஸ்டோ குவேரா டீலா செர்னா** எனும் இயற்பெயரை கொண்ட சே இடதுசாரி சார்பான குடும்பம் என்பதால் இளம் வயதிலேயே அரசியல் ஆர்வமும், தொலைநோக்கு பார்வையும், அரசியல் தொடர்பான பரந்த நோக்கமும் சேவுக்கு இயல்பாகவே இருந்தது. ஸ்பெயினை எதிர்த்து பெரிய போராட்டங்கள் நடந்த காலம் அது. ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட பலர் சேவின் தந்தையை சந்திக்க அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவது வழக்கம்.

இது சோசலிசம் பற்றிய அவரது கருத்துக்களுக்கு வழி வகுத்தது. இவரது வீட்டில் சுமார் 3000 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்ததாக அறியப்படுகின்றது. இதில் மார்க்ஸ் போன்று ஒரு மனிதன் கற்ற வேண்டிய புத்தகங்கள் அனைத்தையும் படித்து முடித்திருந்தார் சே. கவிதைகளின் மீது தீராக் காதல் கொண்டிருந்த சேவுக்கு நெரூடா, கீட்ஸ் உள்ளிட்ட பலரது படைப்புக்களின் மீது சிறப்பான ஆர்வமும் இருந்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஒரு மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதியாக தன்னால் வேரறுக்க முடியும் என்ற ஒருமித்த மனதோடு நம்பினார் சே. கியூபாவிற்கு ஆயுதங்கள் தருவாதாக ரஸ்யா சொன்ன போது ரஸ்யாவின் ஆயுதங்கள் கியூபாவில் இறங்கினால் அவைகள் அமெரிக்காவின் பெரு நகரங்களை குறி வைக்கும் என்று தைரியமாக சொன்னார் சே. அதற்கு காரணம் கியூபா மீது அமெரிக்கா போட்ட பொருளாதார தடைகளாகும்.

அமெரிக்கா தனியார் தொலைக்காட்சி ஒன்றின் நேர்காணலுக்காக சே வை அழைத்தது. அதில் அமெரிக்கா ஒரு கழுதைப்புலி. அதன் ஏகாதிபத்தியத்தை நான் அடியோடு கருவறுப்பேன் என்று அமெரிக்க மண்ணிலேயே கம்பீரமாக கர்ஜித்தார் சே. இலத்தீன், அமெரிக்க நாடுகளில் முதல் புரட்சியாளராக கருதப்படும் ஜோஸ் மார்ட்டினை தனது குருவாக நினைத்து வளர்ந்தார்.

மருத்துவக் கல்லூரி மாணவரான சே தனக்கென ஒரு கூடு இல்லாது சுற்றித் திரிய நினைத்த சாகாசக்காரர். 1951 இல் மருத்துவம் படித்துக் கொண்டிருந்த போது தனது நண்பர் அல்பிரட்டோ கானாவுடன் இணைந்து சுமார் 09 மாதங்கள் தென் அமெரிக்க கண்டம் முழுவதும் சுற்றி வந்தார். அப்போது அவர் எழுதிய குறிப்புகள் தான் பின்னாளில் **“த மோட்டர் சைக்கிள் டைரிஸ்”** என்ற பெயரில் புத்தகமாக வெளியாகி உலகப் புகழ் பெற்றிருக்கின்றது.

உலகிலேயே இயற்கை செல்வ வளங்கள் கொட்டிக் கிடந்த இலத்தீன் அமரிக்க மக்கள் வறுமையின் பிடியில் சிக்கிக் கிடந்ததையும், அவர்கள் மீது ஏவப்பட்டிருந்த அடக்கு முறையையும் கண்ட சே அமெரிக்காவின் எதேச்சதிகாரத்தை உணர்ந்து ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு தீர்வு காண முடியும் என்று நம்பினார்.

தனது பயணத்தின் முடிவில் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் அடிமைப்பட்டு கிடக்கும் மக்களுக்கு ஏதாவது பெரிதாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவரை முழுமையாக ஆக்கிரமித்து இருந்தது. இலத்தீன், அமெரிக்க நாடுகளை தனித்தனி நாடுகளாக பார்க்காமல் ஒட்டு மொத்த கண்டம் தழுவிய விடுதலைப் போர் தேவைப்படும் பகுதியாக பார்த்திருந்தார் சே. தனது படிப்பை முடித்து 1953 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் மருத்துவ டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்ட சேகுவேரா அதே ஆண்டில் மீண்டும் பயணத்தை தொடங்கிய சேவுக்கு பிடல் காஸ்ரோ உட்பட பல்வேறு தொடர்புகள் கிடைத்திருந்தது. அந்த சமயத்தில் அமெரிக்காவின் கைபொம்மையாக பாடிஸ்ராவிடம் கியூபா அடிமைப்பட்டுக் கிடந்தது. பிடல் காஸ்ரோ கைது செய்யப்பட்டு நிபந்தனையில் விடுவிக்கப்பட்டார். தனக்குப் பின்னால் அமெரிக்கா இருக்கிறது என காட்டாட்சி நடாத்தி கொண்டிருந்த பாடிஸ்ராவிற்கு எதிராக தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்தார் பிடல் காஸ்ரோ.

சேகுவேராவை தவிர்த்து விட்டு கியூப புரட்சியை எழுதிவிட முடியாது. எங்கோ ஆர்ஜன்ரீனாவில் பிறந்த ஒருவருக்கு கியூபாவிற்காக போராட வேண்டிய அவசியம் என்ன? ஆனால் யதார்த்தங்களை கடந்த அசாத்தியங்களை விரும்பிய போராளியான சே பிடல் மீது கொண்டிருந்த நட்பினாலும், அடிமை விலங்கு போடப்பட்டிருக்கும் உலக மக்கள் அனைவரும் சமம் என்று கருதியதாலும் தன்னுடைய ஆஸ்துமா நோயைப் பொருட்படுத்தாமல் கைகளில் துப்பாக்கி ஏந்தி படைத் தலைவனாக செயற்பட்டார். அது சாகாசக்காரர் சேகுவேராவால் மட்டும் தான் முடியும்.

பிடலும், சேவும் சேர்ந்து நடாத்திய போராட்டத்தில் பாடிஸ்ரா ஆட்சியில் இருந்து வீழ்ந்தார். காஸரோவை கியூப மக்கள் தலைவராக கொண்டாடினார்கள். தங்கள் நாட்டைச் சேந்தவர் போலவே சேகுவேராவை காஸ்ரோவும், கியூப மக்களும் கொண்டாடியிருந்தார்கள். சேகுவாராவுக்கு கியூப நாட்டு அரசு பல பதவிகளை வழங்கி கௌரவித்தது. கியூபாவின் நிதி மற்றும் தொழில் துறை அமைச்சராகவும் செயற்பட்ட சே அத் துறைகளில் பல்வேறு சீர்திருத்தங்களை செய்திருந்தார். சே தலைமையில் கியூப நாட்டு பிரதிநிதிகள் குழு ஐ.நா கூட்டத் தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றது. அப்போது அவர் ஆற்றிய உரை உலக அளவில் பெரிதும் கவனம் பெற்றது. வெள்ளை நிற வெறி, கறுப்பர் இன மக்களை அமெரிக்கா நடத்திய விதம் ஆகியவற்றை அவர் விமர்சித்திருந்தார்.

தொடர்ந்து கொங்கோவில் நடக்கும் ஆயுதப் புரட்சிக்கு உதவப் போவதாக பிடலிடம் கூறி விட்டுச் சென்ற சேகுவேராவை காணவில்லை. அவரை பிடல் காஸ்ரோ கொன்று விட்டார் என்று வதந்திகள் பரவின. ஆனால் அவர் அமெரிக்க உளவுத் துறையிடம் சிக்கி விடக் கூடது என்ற காரணத்தால் சே எங்கு இருக்கிறார் என்ற தகவலை வெளியிடாமல் பிடல் தொடர்ந்தும் அமைதி காத்தார். உலக மக்களின் விடுதலை மீது அவருக்கு இருந்த பெரு விருப்பம் தான் அவரை கொங்கோ நோக்கி நகர வைத்திருந்தது.

அந் நாட்டு அரசுக்க எதிராக போராடியவர்களுக்க அவர் ஆயுதப்பயிற்சி அளித்தார். பின் அவரது நடவடிக்கைகள் மற்றும் இருப்பிடத்தை அமெரிக்க உளவுத்துறை கண்டறிந்ததை அடுத்து போலிக் கடவுச் சீட்டை பயன்படுத்தி பொலுவியா சென்றார். அமெரிக்க ஆதரவு பெற்ற பொலுவியா இராணுவத்தால் 1967 ஐப்பசி 07 அன்று சிறை பிடிக்கப்பட்ட சேகுவேரா ஐப்பசி 09 இது போன்ற ஒரு நாளில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது உடல் புதைக்கப்பட இடம் அப்போது தெரிவிக்கப்படவில்லை. பின்னர் 1995 இல் பொலுவிய காடுகளில் சேகுவேராவின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு 1997 ஐப்பசி 17 ஆம் திகதி அன்று கியூபாவில் இராணுவ மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சேகுவேராவின் மதிப்பீடுகள் அவரது தலைமுறையின் மதிப்பீடுகளோடு சேர்ந்து இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கின்றன. சமத்துவம், ஒற்றுமை, தனி நபர் விடுதலை, சமூக விடுதலை ஆகிய நமது யுகத்தின் இலட்சியங்களுக்கு சேகுவேரா என்றும் தேவைப்படுகின்றார்.

1967 ஐப்பசி 08 ஆம் நாள் காலை வேளையில் யூரோ கணவாயை கெரில்லா வீரர்களுடன் கடந்து சென்று கொண்டிருந்தார் சேகுவேரா. அச்சமயம் ஆடு மேய்க்கும் ஒரு பெண்ணை கண்டு பரிதாப்பட்ட சே அவளுக்கு 50 வெசோக்களை பரிசாக வழங்கியிருந்தார். நண்பகல் வேளையில் அந்தப் பெண் பொலுவிய இராணுவத்திற்கு சே யின் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்தார். சே வையும் அவருடன் இருந்த வீரர்களையும் சுற்றி வளைத்த பொலுவிய இராணுவம் அவர்களை நோக்கி சரமாரியாக சுட்டுத் தள்ளியது. பதிலுக்கு கெரில்லா வீரர்களும் தாக்குதல் நடாத்தினர். இதில் இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் சே வின் காலில் குண்டு அடிபட்டது. அப்போது சே சொன்னார். **‘‘நான் இறப்பதைக் காட்டிலும் உயிரோடு இருப்பது தான் உங்களுக்கு பயன் தரும்’’**என்று.

குண்டடிபட்ட சே வை வீரர்கள் கைத் தாங்கலாக அழைத்துச் சென்று பள்ளிக்கூடம் ஒன்றில் தங்க வைத்தனர். சே கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன் அவருக்கு அந்தப் பள்ளிக் கூடத்தில் உணவு கொடுத்து பேசிக் கொண்டிருந்த அந்த ஆசிரியர் யூலியஸ் கேட்டஸ் என்னும் 19 வயது பெண்மணியிடம் பள்ளிக்கூடச் சூழலை பார்த்து விட்டு இவ்வாறாக சொல்கிறார் ‘‘இது போன்ற சூழலில் எப்படி குழந்தைகள் இங்கு படிப்பார்கள்? ஒரு வேளை நான் பிழைத்தால் உங்களுக்கு நல்ல பள்ளிக்கூடம் கட்டித் தருவேன் என்று.

சே! எப்போதும் புரட்சியாளர் தான். ஆம். மக்களுக்கான புரட்சியாளர் அவர். சே வை சுட்டுக் கொல்ல வேண்டும். யார் அந்த காரியத்தை செய்கிறீர்கள் என்று கேட்ட போது ‘‘மரிஜோ ஜெர்மி’’ என்னும் பொலுவிய இராணுவ சார்ஜண்ட் அந்தக் கொடும் செயலை செய்வதற்கு ஒப்புக் கொள்கின்றான். கைகள் கட்டப்பட்ட நிலையில் தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சே **‘‘மண்டியிட்டு உயிர் வாழ்வதை விட நின்று கொண்டு சாவது எவ்வளவே மேல்’’** என்றார் சே.

ஆனால் அந்த இராணுவ வீரனோ சே வை ஒரு கோழை போல கொள்வதற்கு தயாரானான். கடைசி நிமிடத்தில் கூட என்னை நிற்க வைத்து சுடுங்கள் என்றார் சேகுவேரா.

ஆனால் அந்தக் கோழையோ சேவின் பார்வையைக் கூட எம்மால் நேருக்கு நேர் நின்று எதிர்கொள்ள முடியாது என்ற காரணத்தினாலோ என்னவோ அன்று மாவீரன் சொன்னதை அலட்சியப்படுத்தினான்.

“கோழையே நீ சுடுவது ஒரு சேகுவேராவை அல்ல. ஒரு சாதாரண மனிதனைத் தான் என்று இதயம் கிழிக்க, கண்கள் மின்ன தன்னுடைய கடைசி வார்த்தைகளை உமிழ்ந்தார் சே.

எந்த தேசம் அவரை அழிப்பதில் தீவிர முனைப்பு காட்டியதோ, எந்த தேசம் அவர் வரலாற்றை முழுவதும் அழிக்க வேண்டும் என்று தீவிரம் காட்டியதோ அந்த தேசத்தில் தான் இன்று சே வின் முகம் அதிகமாக பதிக்கப்பட்ட பொருட்கள் விற்பனையாகின்றன. எந்த தேசம் அவர் பெயரை காற்றில் கரைந்து போக நினைத்ததோ, அந்தப் பெயர் தான் உலகம் முழுதும் காற்றில் கலந்து கோடிக்கணக்கான இளைஞர்களின் தாரக மந்திரமாக இப்போதும் உச்சரிக்கப்படுகின்றது.

கியூபாவில் இப்போதும் ஒரு வழக்கம் உண்டு. அதிகாலையில் வகுப்பறைகளுக்கு செல்லும் முன் அத்தனை குழந்தைகளும் ஒருமித்த குரலில் முழங்குகின்ற வாசகம் என்ன தெரியுமா? ஆம். **“எங்களது முன்னோர்கள் கமியூனிஸ்டுகளாக இருந்தனர். நாங்கள் சேகுவேராவைப் போல் இருப்போம்.”**

ஆம். அவர் அளிக்கப்படவில்லை. மிகக் பெரும் விளைவுகளை எதிர்காலத்திலும் ஏற்படுத்த இன்னும் சேகுவேரா எனும் சொல்லாக வாழந்து கொண்டிருக்கிறார் அனைவர் மனதிலும்…!

**“விளைவுகளை ஏற்படுத்தாத**
**எந்த சொல்லும் வீணானது”**

**–மாவீரன் சேகுவேரா–**

செல்வன்.ராஜன் லிந்துஜன்
உறுப்பினர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# 6. இளைஞர்களூடாக சமாதான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.

- கடந்த ஆண்டில் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் போலவே இந்த ஆண்டும் செயற்படுத்தப்படுகின்றது. அதாவது செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையுடன் இணைந்து "சமாதானத்தின் எதிர்காலம்" எனும் செயற்றிட்டத்தை செயற்படுத்துகின்றோம்.

- இதில் கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவை அடங்குகின்றன.

- கலந்துரையாடல் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்ட படங்கள் கீழே...

1. 2020.09.27 (கலந்துரையாடல்-01)




2. 2020.10.03 (கலந்துரையாடல்-02)




3. 2020.10.10 (கலந்துரையாடல்-03)




கலைகளூடாக சமாதானத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான 03 நாட்களைக் கொண்ட பயிற்சிப் பட்டறையின் படங்கள்…

1) விடயம்:- ஆட்சதேன் பயிற்சிப்பட்டறை (கலைகளூடாக சமாதானத்தை கட்டியெழுப்புதல்)
2) திகதி:- 2020.10.29 தொடக்கம் 2020.10.30 வரை
3) இடம்:- தந்தை செல்வா கலையரங்கு, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.









# வலிகளின் வரிகள்

அன்று அது யுத்த பூமி!

ஐ.நா சபையும் தட்டிக் கேட்கவில்லை
குண்டுகளும் எமை விட்டு வைக்கவில்லை
ஒற்றைத் தறப்பாள் ஓலைக் குடிசைக்குள்
எத்தனை உயிர்கள்
கொத்துக் கொத்தாய்
கொன்று குவிந்தன?



சேவல் கூவி விடியும் காலை! - அது
நம்மவர் வாழ்வில்
குண்டு மழை கூவி விடியும் வேளை...

உயிர் பிரியத் துடிக்கும்
தத்தித் தவழும் குழந்தை - அதற்கு
உயிர் கொடுக்க ஏங்கும் தாயின் மனது..

கண்களில் கண்ணீருடன், இரத்தமும்
ரணமாய் பெருக்கெடுக்கின்றது.
உடல்கள் எங்கும் ஆறாத காயங்கள்
எம் மனங்கள் எங்கும்
ஆற்ற முடியா சோகங்கள்

யாவரும் ஓர் வழியில்
வலிகளுடன் எம் இனம்
விடியும் கணப்பொழுதில்
எமை விட்டு
மறையும் பல உயிரினம்

மீண்டிடுமோ எம் சனம் - இனியாச்சும்
மிளிர்ந்திடுமோ தமிழ் இனம்?

செல்வி.லிப்சியா மகேந்திரம்
நிர்வாக சபை உறுப்பினர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு

# 7. போசாக்கு உணவுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள்

- போசாக்கான உணவினை பாடசாலை மாணவர்கள் அதிகமாக உட்கொள்ளுதலை ஊக்குவித்தல் மற்றும் பாடசாலை சிற்றுண்டிச்சாலைக் கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஒன்று கடந்த காலங்களில் Scalling Up Nutrition (SUN) அமையத்தின் நிதி அனுசரணையுடன், சர்வோதயம் நிறுவனத்தின் பங்களிப்போடு எமது அமைப்பு செயற்படுத்தியிருந்தது.

- Scalling Up Nutrition (SUN) அமையத்தின் அங்கத்துவ நிறுவனமாக எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு காணப்படுவதால் இச் செயற்றிட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படுத்துவதற்கு எமக்கு வாய்ப்பு கிடைத்தது.

- இதில் இரண்டு கட்ட கலந்துரையாடல்களும் மற்றும் பதாதைகள் காட்சிப்படுத்தல் மற்றும் திறமையானவர்களுக்கு பரிசில் வழங்கல் செயற்றிட்டமும் இடம்பெற்றது.

- செயற்பாடுகளின் படங்கள் கீழே….

1) கலந்துரையாடல்கள்









2) பாடசாலைகளில் பதாதைகளை காட்சிப்படுத்தல்.









3) பரிசில் வழங்கல் செயற்பாடு





# 8. சமூகப் பணிகளில் இளைஞர்களின் பங்களிப்புக்கள்

**கொரோனா ஊரடங்கு கால நிவாரணப் பணி**

- 2020 ஆம் வருடம் ஆரம்பத்திலேயே கொரோனா (Covid-19) எனும் கொடிய நோய்த் தொற்று காரணமாக உலகம் முழுவதும் ஸ்தம்பிதம் அடைந்திருந்த நிலையில் இற்றை வரை அந் நோய் தொற்று தன்னுடைய வீரியத்தில் துளியளவும் குறையாது உலகையே உலுக்கி வருகின்றது என்று தான் சொல்ல வேண்டும். இதனால் பல நாடுகள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயற்சிகள் பலவற்றை ஆரம்பத்தில் எடுத்து வந்தன.

அது போலவே எமது இலங்கைத் திருநாட்டிலும் கொரோனா நோய் தடுப்பு விசேட செயலணி ஒன்று ஜனாதிபதியால் இராணுவத் தளபதி தலைமையில் உருவாக்கப்பட்டு அச் செயலணியின் பரிந்துரைகளுக்கு அமைய நாட்டில் அவ்வப்போது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 03 மாத காலங்கள் நாடே இருளில் மூழ்கியது போலானது. இச் சமயம் அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் உட்பட அன்றாடம் கூலி வேலை செய்து தமது வயிற்றுப் பிழைப்பை நடாத்தும் சமானியன் கூட பாதிக்கப்பட்டான்.

இந் நிலையை கருத்திற் கொண்ட பலர் அன்றாட உணவிற்கு அல்லலுறும் அனைத்து குடும்பங்களுக்கும் தம்மாலான உதவிகளை செய்து வந்தனர். இதில் அரச திணைக்களங்கள், தொண்டு நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சமூக சேவகர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் என அனைவரும் பாகுபாடு இன்றி வறியவர்களுக்கு பல உதவிகளை மேற் கொண்டனர்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனமும் தம்மாலியன்ற நிவாரணப் பணியை செய்ய முன் வந்தது. இதற்கு அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம் (SLCDF) நிதி உதவி அளித்திருந்தது. அதாவது பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களிற்கு ரூபா 1000 பெறுமதியான நிவாரணப் பொதியை வழங்க முடிவெடுத்தது. ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனத்திற்கு தம்மாலான உதவிகளை செய்ய எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியன முன் வந்தன. தொடர்ந்து ஊரடங்கு சட்ட வேளையில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்காக மாவட்டச் செயலகத்திற்கு கடிதம் மூலம் பரிந்துரைத்து அனுமதி பெற்று இச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

- குறிப்பு:- நிவாரணப் பணியை மேற்கொள்ளும் போது எந்தப் புகைப்படங்களையும் நாம் எடுக்க விரும்பவில்லை. அதனால் இதில் புகைப்படங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

# 9. சமூக மட்ட அமைப்புக்களுடனான ஒருங்கிணைந்த செயற்றிட்டங்கள்

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பானது இளைஞர்களின் நலனில் அக்கறை கொண்டு மாவட்டத்தில் இளைஞர்களூடாக அபிவிருத்தியை நிலை நாட்டுவதை எண்ணமாக கொண்டு செயற்படுவதால் இளைஞர்கள் நலனில் மிகவும் அக்கறை கொண்டு செயற்படும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் சமூக மட்ட குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவதுடன் அமைப்பின் இலக்கை அடையவும் முயற்சிக்கின்றது. அதனடிப்படையில்…

- அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்தக் கலந்துரையாடல்கள் மற்றும் ஏனையவை

- சர்வோதயம் போன்ற நிறுவனங்களின் இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்.

- இணை நிறுவனங்களினுடைய கலந்துரையாடல்களில் பங்குபற்றல்

போன்றவைகளை எமது செயற்பாடுகளில் ஒருங்கிணைத்து செயற்படுகின்றோம்.

➢ **அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்றிட்டங்களில் கலந்து கொள்ளல்.**

- அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவ நிறுவனமாக எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு காணப்படுவதால் அதனுடைய அனைத்து செயற்றிட்டங்களிலும் அதனுடைய அழைப்பின் பேரில் கலந்து எமது பங்களிப்பை வழங்குவோம்.

- அதனடிப்படையில்…

    1. மாதாந்தக் கலந்துரையாடல்கள்,
    2. பயிற்சிப் பட்டறைகள்
    3. பொதுக் கூட்டங்கள்
    4. ஏனைய பொதுச் செயற்பாடுகள்

    போன்றவற்றிலும் கலந்து கொள்வோம்.

- படங்கள் கீழே…

- மாதாந்தக் கலந்துரையாடல்கள் (கலந்து கொண்டவை மாத்திரம்)


2020.02.11


2020.03.10


2020.06.02


2020.08.11


2020.09.08


2020.10.20

- தகவல் அறியும் சட்ட மூலம் தொடர்பான பயிற்சிப் பட்டறை (2020.08.21)





- மேசைப்பந்து விளையாட்டில் தேசிய ரீதியல் முதலிடம் பெற்ற செல்வி.தனுசியா பாலகிருஸ்ணனுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட பொழுதுகள் (2020.10.24)








## ➢ இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்

01. UN Women நிறுவனத்தின் பால்நிலை சமத்துவம் தொடர்பான பயிற்சி நெறி






02. குடும்ப நல புனர்வாழ்வு நிறுவனத்தின் (FRC) உளவளத்துணை பயிற்சிநெறி





03. Scalling Up Nutrition (SUN) நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறைகள்





04. சர்வோதயம் நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறை.

- தகவல் அறியும் சட்டமூலம் தொடர்பான பயிற்சி (2020.03.13)





05. UN Women நிறுவனத்தின் அனுசரணையுடன் விழுதுகள் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட பால்நிலை சமத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை.





06. சிறகுகள் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை. (2020.08.01)





07. சமூக செயற்பாட்டு வலையமைப்பின் கலந்துரையாடல்.





08. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கலந்துரையாடல்




# 10. பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பும், ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனமும்

பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் வளர்ச்சிக்கு இற்றை வரை தமது முழு ஆதரவை நல்கும் ஒரே நிறுவனம் என்றால் அது ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம் என்றால் மிகையாகாது.

2018.11.05 ஆம் ஆண்டு அமைப்பினை ஆரம்பித்த நாள் தொடக்கம் இற்றை வரை எமது அமைப்பை வளர்த்து விடுவதிலும், இளைஞர் நலச் செயற்றிட்டங்களுக்கு எமக்கு அனுசரணை வழங்குவதிலும், தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன் எமது அமைப்பிற்கு என்று தனி அலுவலக அறையை ஒதுக்கி தந்ததுடன் தங்களது அலுவலகத்தையும் எமது தேவைக்கு பயன்படுத்தவும், தங்கள் நிறுவன தளபாடங்களையும் எமது பாவனைக்கு தற்காலிகமாக வழங்கி அனுசரித்தது.

அத்துடன் அலுவலகத்தில் நடைபெறும் அனைத்து அவர்கள் சார்பான செயற்றிட்டம் மற்றும் நிகழ்வுகளிற்கு எம்மை அழைத்து பங்கேற்கச் செய்வதும், நாம் செய்யும் செயற்பாடுகளிற்கு அவர்களை அழைத்து பங்களிக்கச் செய்வதுமாக எமக்கும் அவர்களுக்கும் இடையிலான இந்த நல்லுறவு தொடர்ந்த வண்ணமே உள்ளது.

நாம் ஏற்கனவே எமது இளங்கதிர்-01 புத்தகத்தில் குறிப்பிட்டதைப் போன்று எம்மை உருவாக்கி இற்றை வரை வழிநடாத்தும் ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனத்தின் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் எமது பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் மனமுவர்ந்த நன்றிகளும், நவில்தல்களும் உரித்தாகட்டும்.

அத்துடன் எந்த வித இலாப நோக்கமுமற்று இளைஞர்களின் வளர்ச்சிக்காக தங்களையே அர்ப்பணித்து எம்மோடு இதுநாள் வரை பயணப்பட்டுக் கொண்டிருக்கும், தங்கள் பெயரையே வெளியில் உச்சரிக்காமல் மற்றவர்களுக்கு பின் நின்று உந்துதல் அளிக்கும் எமது அமைப்பின் மிக நெருங்கிய நலன் விரும்பிகளுக்கும் நாம் இத் தருணம் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனத்தின் பல தூண்களில் இளைஞர்களாகிய நாமும் ஒரு தூண் என்பதை அறிவோம். அத் தூணை இன்னும் பலப்படுத்துவதுடன் எத் தருணத்திலும் தங்களுக்கு இளைஞர்களாகிய எமது ஆதரவும் இருக்கும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்

- பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு, ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியன சேர்ந்து சிறப்பித்த நிகழ்வுகளின் படங்கள் கீழே…

01. தைப்பொங்கல் நிகழ்வு (2020.01.14)








02. ஆடிக்கூழ் கொண்டாட்ட நிகழ்வு (2020.07.16)





03. நவராத்திரி விழா நிகழ்வு (2020.10.24)






# 11. பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் 02 ஆவது அகவை நாள் நிகழ்வுப் படங்கள்



















# பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு
# அலுவலகத்தின் புகைப்படங்கள்












# நன்றி நவில்தல்



பச்சை வயல் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்களால் உருவாக்கப்பட்டு மாற்றத்தை நோக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் செயலாளராக இருந்து அவ் அமைப்பினூடாக இந்த ஆண்டும் வெளிவரும் **"இளங்கதிர்:-02"** இதழ் வெளியீட்டின் நன்றி நவில்தலைத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்வடைகிறேன்.

எமது அமைப்பானது தனது இலக்கை நோக்கி வெற்றி நடை போடுவது யாவரும் அறிந்ததே. அந்த வெற்றிப் பாதையில் எமக்கு ஆதரவாக பல நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், நலன் விரும்பிகள் செயற்பட்டுள்ளனர்.

அந்த வகையில் மிக முக்கியமாக எம்மை உருவாக்கி வைத்ததுடன் இற்றை வரை தனது முழுமையான ஆதரவை வழங்கி வரும் ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம், அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம், சா.ஜே.வே செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், சர்வோதயம் மற்றும் மேலதிக அமைப்புக்கள், நிறுவனங்களிற்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து எமது அமைப்பின் நலனில் அக்கறை கொண்டு கரிசனை செலுத்தி வரும் அனைவருக்கும் இதனூடாக நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இவ்விதழ் எமது அமைப்பின் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற செயற்பாடுகளையும், அமைப்பு உறுப்பினர்களின் ஆக்கங்களையும் தாங்கி வரும் இரண்டாவது வெளியீடு என்பதுடன் ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல் ஒவ்வொரு வருட ஆண்டு நிறைவிலும் இவ்விதழ் வெளிவரும் என்னும் நம்பிக்கையை இந்த வருடமும் செயற்படுத்தியிருக்கின்றது. மேலும் இவ்விதழ் வெளிவர உறுதுணை புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் சமூகம் சார் சிந்தனையுடன் இளைஞர்களை நெறிப்படுத்த எம்மோடு கை கோரத்து நடப்பீர்கள் என்று நம்பி அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளை பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

செல்வி.தமிழினி மகேந்திரன்
செயலாளர்
பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பு



Naaga's
Bake city
நாகாஸ் வெதுப்பகம்
தரமான சுவையான வெதுப்பக உணவுகள்
குறைந்த விலையில்....
Naaga's
Bake city
tasty bakings at tasty prices
RR CAFE
tasty bakings at tasty prices
155ம் கட்டை, A9 வீதி, கிளிநொச்சி.
155th milepost, A9 road, kilinochchi. T.P:-0779772446

PNS

DIGITAL ONLINE MARKET

# வீட்டில் இருந்தவாறே பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்

077-1317941

pnsmarket89@gmail.com

# AKAMATHI Group

No-16/1B, Kaneshapuram, Kilinochchi

akamathisl@gmail.com
www.akamathi.com
+94 (77) 4404456
+94 (77) 3562424

# கண்காணிப்பு கேமரா

## CCTV







வடக்கின் முன்னோடி நிறுவனமான
அகமதி நிறுவனத்தால்...




உலகத்தரம் வாய்ந்த HIKVISION கண்காணிப்பு கேமராக்கள் குறைந்த விலையில் 2 வருட உத்தரவாதத்துடன் அகமதி நிறுவனத்தினால் பொருத்திக்கொடுக்கப்படும்.

## மென்பொருள் வடிவமைப்பு

இணையத்தள Design & Development

Logo Design

Search Engine Optimization

Software Development






24 மணி நேரமும் உங்கள் வாகனத்தின் நகர்வுகளை துல்லியமாக வரைபடம் மூலம் அவதானிக்கக்கூடிய தரமான ஜி.பி.எஸ் சாதனத்தை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.






Point of Sale


Business Board
உங்கள் வியாபாரத்தினை இணையத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமா?
இன்றே உங்கள் வியாபாரத்தினை பிசினெஸ்போர்ட் இணையத்தளத்தில் பதிவுசெய்யுங்கள்.
www.businessboard.lk
உங்கள் வியாபாரங்களை டிஜிட்டல் தளங்களுக்கு கொண்டுசெல்ல நாம் உதவுகின்றோம்.
About Us
BusinessBoard (BB) is here to support business to go digital and increase revenue by being online. BB also helps business with digital resource's, training and assistance to improve revenue and customer relationship.
Online Job Listing on Jobboard.lk
உங்கள் வியாபார நிறுவனங்களில் உள்ள வேலை வெற்றிடங்களை நிரப்ப வேலைவாய்ப்புகளை Jobboard இணையத்தளத்தில் பதிவேற்றல்.
List Your Business On BusinessBoard & Google
உங்கள் வியாபார நிறுவனங்களைGoogle My Business, BusinessBoard தளங்களில் பதிவேற்றுதல் மூலம் வாடிக்கையளர்களை அதிகரித்தல்.
Buid Business Profiles On Social Media Websites
உங்கள் வியாபாரங்களுக்கான சமூக வலைத்தளங்களை உருவாக்கி அதனை ஒழுங்கமைத்தல் மூலம் வியாபாரத்தின் இனைய பிரவேசத்தினை அதிகரித்தல்.
Built High Quality Websites For Your Business
உங்கள் வியாபாரங்களுக்கு தேவையான இணையதளங்களை வடிவைமைத்து அதை பயன்படுத்துவதற்கான தக்க பயிற்சிகளை வழங்குதல்.
Create Proffesional Email For Your Business
உங்கள் வியாபாரத்திற்காக பிரத்தியேகமான ஈமெயில் முகவரிகளை அமைப்பதன் மூலம் உங்கள் வியாபாரங்களின் தரத்தினை அடுத்தகத்திற்கு எடுத்துச்செய்தல்.
"உங்களது வியாபாரம் இணையத்தில் இல்லை என்றால், உங்களது வியாபாரம் வியாபாரம் எனும் வரையறைக்குள்ளேயே அற்றதாகி விடுகின்றது"-- பில்கேட்ஸ்
www.businessboard.lk


V.ELECTRICIAN
It is our pleasure to be of service to you
V.ELECTRICIAN
Our mission is to provide the BEST possible electrical service
to our customers and we have strict quality and SAFETY
WIRING | PLUMBING | CCTV
BOOK NOW
FOR MORE DETAILS :- 0767 339 916

# நன்றிகள்